மலர்-1 இதழ்-12 பிப்ரவரி 16-28 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்**



## சிவராத்திரி விரதத்தின் மகிமைகள்

## லிங்க ரூபத்தின் காரணங்கள்

# சிவபெருமான் லிங்க ரூபமாக காட்சி தருவன் நோக்கம்

**லிங்க புராணம் கூறும் விளக்கம்**

உலகில் உள்ள தெய்வங்கள் அனைத்திற்கும் தனிப்பட்ட உருவம் ஏற்படுத்தப்பட்டு, சிலா ரூபமாகவே வழிபடுபவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஆனால் சிவபெருமானுக்கு மட்டும் சிலா ருபம் வைக்காமல் லிங்க ருபமாகவே வழிபாடு நடைபெறுகிறது.

ஏன் இப்படி சிவன் சிலா ரூபமாக இல்லாமல் லிங்க ரூபமாக வழிபடப்படுகிறார்? என்பதற்கு, லிங்க புராணம் ஒரு கதை சொல்கிறது. ஒருமுறை பிரம்மாவுக்கும் மகாவிஷ்ணுவுக்கும் இடையே தங்களில் யார் பெரியவர்? என்ற வாக்குவாதம் ஏற்பட்டபோது மிகப் பெரிய அக்னிகோளமாக அவர்கள் நடுவே தோன்றினார் சிவபெருமான். அதுவே முதன் முதலாக இறைவன் எடுத்த லிங்க வடிவம். அன்று முதல் லிங்கோத்பவம் உதயமாயிற்று. லிங்கோத்பவம் என்றால் லிங்கம் தோன்றுதல் என்று பொருள். அன்று முதல் இன்று வரை சிவபெருமான் லிங்க உருவத்திலேயேதான் வழிபடப்பட்டு வருகிறார். அவ்வாறு வழிபாட்டுக்குரிய லிங்கங்கள் பலவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் சிலவகையான லிங்க ரூபங்களைப் பார்ப்போம்.

## சுயம்பு லிங்கம்

தானாகவே இறைவனின் இச்சைப்படி தோன்றிய லிங்கம்.

## தெய்வீக லிங்கம்

தேவர்களால் பூஜிக்கப்பட்டு ரிஷிகள் மூலமாக பூமிக்கு வந்த லிங்கம்.

## அர்ஷ லிங்கம்

ரிஷிகளும் முனிவர்களும் தங்கள் வழிபாட்டுக்கென உருவாக்கிய லிங்கம்.

## மனுஷ்ய லிங்கம்

சாதாரண மனிதர்களால் உருவாக்கப்பட்ட லிங்கம். இந்த லிங்கம் மேலும் பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. குறைந்தது 96 வகை மனுஷ்ய லிங்கங்கள் இருக்கலாம் என்று மகுடாகமம் என்னும் ஆகம நூல் கூறுகிறது.

இந்த 96 வகை லிங்கங்கள் அவற்றின் அமைப்பு அதாவது பீடத்தின் அளவு பாணத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து மேலும் பிரிக்கப்படுகிறது. கீழே இருக்கும் சதுரப் பகுதி பிரம்ம பாகம் எனவும், நடுப்பகுதி விஷ்ணு பாகம் எனவும் மேற்பகுதி ருத்ர பாகம் எனவும் வழங்கப்படுகின்றன.



## க்ஷணிக லிங்கம்

தற்காலிக வழிபாட்டுக்குப் பயன்படுவது. அந்தக் காலத்தில் நீண்ட தூரம் பயணம் செல்பவர்கள் தங்களுடன் லிங்கத்தை எடுத்துச் செல்லாமல் ஆங்காங்கே கிடைக்கும் தெய்வீகப் பொருட்களைக் கொண்டு அன்றைய பூஜைக்காக உருவாக்கும் லிங்கமே க்ஷணிக லிங்கம் எனப்படுகிறது.

இத்தகைய லிங்கங்கள், மலர், அன்னம், சந்தனம், விபூதி ஆகிய பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படலாம். அவை உரு வாக்கப்படும் பொருட்களுக்கேற்றவாறு பெயர் பெறுகின்றன. உதாரணம், பூக்களால் உருவாக்கப்பட்ட லிங்கம் க்ஷணிக புஷ்ப லிங்கம் எனப்படுகிறது.

## வர்த்தமானக லிங்கம்

வழிபாட்டுப் பெருமைக்குரியது. பிரம்ம பாகமும், விஷ்ணு பாகமும் ஒரே அளவு இருந்து ருத்ர பாகம் மட்டும் அதைப்போல இரு மடங்கு இருப்பதே வர்த்தமானக லிங்கம் எனப்படும். இத்தகைய லிங்கம் வழிபடுவோருக்கு முக்தி அளிக்கவல்லது.

## ஆத்ய லிங்கம்

இதில் மூன்று பாகங்களும் சமமான அளவு இருக்கும். இவை தவிர புண்டரீகம், விசாலா, வத்சா மற்றும் சத்ரு மர்த்தனா என்று நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது. புண்டரீக வகை லிங்கத்தை வழிபட்டால் பெரும் புகழும், விசாலா வகை லிங்கம் பெரும் பொருளும், வத்சா லிங்கம் எல்லா வளங்களும், சத்ரு மர்த்தனா எல்லாவற்றிலும் வெற்றியையும் தருவன என்கிறது ஆகம சாஸ்திரம். ஏக முக லிங்கம், சதுர் முக லிங்கம், பஞ்ச முக லிங்கம் என முகங்களின் அடிப்படையிலும் லிங்கங்கள் பகுக்கப்படுகின்றன. இதில் பஞ்ச முக லிங்கம் என்பது சிவனுடைய தத் புருஷ, அகோர, சத்யோஜாத, வாமதேவ, ஈசான முகங்களைக் குறிக்கும். சதுர்முக லிங்கம் என்பது ஈசான முகம் தவிர மற்ற நான்கும் கொண்டது. பஞ்சபூத லிங்கங்கள் என்றும் ஒரு வகை இருக்கிறது. அவை ப்ரித்வி லிங்கம் (பூமி), வாயு லிங்கம், ஜலலிங்கம், ஆகாச லிங்கம், தேஜோ லிங்கம் (அக்னி). இவை எல்லாமே மனுஷ்ய லிங்க வகைகள்தான்.

களிமண், உலோகம் அல்லது கற்களாலும் லிங்கங்கள் செய்து வழிபடலாம் என்று காமிக ஆகய நூல் கூறுகிறது. களி மண்ணிலேயே இரண்டு வகை லிங்கங்கள் செய்யப்படுகின்றன. சுட்ட களிமண் லிங்கம், சுடாத பச்சைக் களிமண் லிங்கம், சுட்ட களி மண் லிங்கம் பொதுவாக தாந்திரீகர்களாலும், அபிசார (பில்லி சூனிய) தோஷம் உடையவர்களாலும் வணங்கப்படுகிறது. இவை தவிர நவரத்தினங்களால் ஆன லிங்கங்களும் உண்டு. அவை பன லிங்கங்கள் எனப்படுகின்றன. சில முக்கியமான வகை லிங்கங்களையும் அவை தரும் பலன்களையும் பார்ப்போம்.

## பாண லிங்கம்

பாண லிங்கம் வடித்தெடுக்கப் படுவதில்லை. இந்த லிங்கத்தில் எப்பொழுதும் சிவசாநித்யம் உண்டு. பானாசுரன் ஒரு சின்ன உளுந்து முதல் ஒரு முழம் முடிய உள்ள லிங்கங்களை மந்திரங் கொண்டு பூசித்தமையால் பாணலிங்கம் எனப் படுகிறது என்றும் கூறுவர். ஆயிரம் கல் சிவ லிங்கத்திற்கு ஒரு ஸ்படிக லிங்கம் சமம் என்றும் 12 லட்சம் ஸ்படிக லிங்கங்களுக்கு ஒரு பாணலிங்கம் சமம். பாண இலிங்கம் என்பது புண்ணிய நதிகளான கங்கை யமுனை நர்மதை போன்றவற்றில் லிங்க வடிவிலே உருண்டோடி வரும்.

## கந்த லிங்கம்

சந்தனம், குங்குமம், மற்றும் கஸ்தூரி ஆகியன

கலந்து உருவாக்கப்படுவது. இது க்ஷணிக லிங்க வகையைச் சார்ந்தது. நம் தேவைக்கேற்ற அளவில் இதை உருவாக்கிக் கொள்ளலாம். வழிபடுவதால் சிவசாயுஜ்ய மோட்சம் எனப்படும் பிறப்பில்லாத நிலை சித்திக்கும்.

### புஷ்ப லிங்கம்

பலவகையான வாசனையுள்ள மலர்களாலும், பல நிறம் கொண்ட அழகிய மலர்களாலும்,உருவாக்கப்படுவது. வழிபடுவதால் நில சம்பந்தமான பிரச்னைகள் தீரும், நல்ல சொத்தும் சேரும்.

### கோசாக்ரு லிங்கம்

பழுப்பு நிறத்தில் உள்ள பசுவின் சாணத்திலிருந்து உருவாக்கப்படும் லிங்கம் இது. இதை வணங்கினால் வளம் பெருகும். இதுவும் க்ஷணிக லிங்க வகையே ஆகும்.

### வாலுக லிங்கம்

சுத்தமான மணல் கொண்டு உருவாக்கப்படும் இதை வணங்கினால் கல்வியும் ஞானமும் உண்டாகும்.

### யவாகோதுமாசாலிஜ்ஜ லிங்கம்

இந்த லிங்கம் யவை, சோளம், கோதுமை போன்ற தானியங்களின் மாவினால் உருவாக்கப்படுகிறது. இது குழந்தை பாக்கியத்தை அருளும்.

### சீதாகண்ட லிங்கம்

இனிப்புகளால் உருவாக்கப்படும் இது, நல்ல உடல் ஆரோக்கியத்தை அளிக்க வல்லது.

### லவண லிங்கம்

உப்போடு மஞ்சள் மற்றும் திரிகடுகம் எனப்படும் சித்த மருந்து கலந்து செய்யப்படுகிறது. இது மற்றவர்களை வசீகரிக்கும் சக்தியை அருள்கிறது.

### திலாப்சிஷ்த லிங்கம்

எள்ளை அரைத்து செய்யப்படும் இது, எல்லா ஆசைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும்.

### பாம்ச லிங்கம்

சாம்பல் கொண்டு செய்யப்படும் இது, எல்லா நற்குணங்களையும் வளர்க்கும்.

### கூட லிங்கம் அல்லது சீதா லிங்கம்

வெல்லத்தால் செய்யப்படும் இது, மன நிம்மதியை அருளும்.



**புண்டரீக வகை லிங்கத்தை வழிபட்டால் பெரும் புகழும், விசாலா வகை லிங்கம் பெரும் பொருளும், வத்சா லிங்கம் எல்லா வளங்களும், சத்ரு மர்த்தனா எல்லாவற்றிலும் வெற்றியையும் தருவன என்கிறது ஆகம சாஸ்திரம்**

### வன்சங்குர லிங்கம்

மென்மையான மூங்கில் இலைகளால் ஆனது இந்த வகை லிங்கம். வழிபடுவோருக்கு நோய் நொடியற்ற நீண்ட ஆயுளைத் தரும்.

### பிஷ்டா லிங்கம்

அரிசிமாவினால் செய்யப்படும் இந்த லிங்கம், நல்ல கல்வியறிவைத் தரும்.

### ததிதுக்த லிங்கம்

பாலிலிருந்தும் தயிரிலிருந்தும் முழுவதுமாக தண்ணீரை நீக்கிய பிறகு இந்த லிங்கம் உரு வாக்கப்படுகிறது. வணங்கியோருக்கு மன மகிழ்ச்சியையும் வளங்களையும் அருளும் தன்மையது.

### தான்ய லிங்கம்

நவ தானியங்களால் உருவாக்கப்படும் இந்த லிங்கம், விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலைத் தரும்.

### பழ லிங்கம்

பல்வகையான பழங்களால் உருவான இது, பழத்தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு நல்ல பலனைத் தரும்.

### தாத்ரி லிங்கம்

நெல்லிக்காயைக் கொண்டு உருவாக்கப்படும் இது, மிகவும் கஷ்டப்படுபவர்களுக்கு அந்த வாழ்விலிருந்து விடுதலையைத் தரும்.

### நவநீத லிங்கம்

வெண்ணெயால் உருவான இது, பணமும் புகழும் தரும்.

### கரிக லிங்கம்

விசேஷ வகைப் புல்லால் உருவாக்கப்படும் இது, துர்மரணத்தைத் தடுக்கும்.

### கற்பூர லிங்கம்

கற்பூரத்தினால் இது உருவாக்கப்படுகிறது. சிறந்த ஞானத்தைத் தந்து மாயையை அழிக்கும்.

### ஆயஸ்காந்த லிங்கம்

காந்தத்தால் உருவான இது, சித்தர்கள் வணங்கும் லிங்கம். அஷ்டமா சித்திகளையும் எளிதாக அளிக்க வல்லது.

### மவுக்தித லிங்கம்

முத்துகளை எரித்த சாம்பலிலிருந்து உருவாக்கப்படும் லிங்கம். மங்களமும், செல்வ வளமும் அருளும் தன்மையது.

### ஸ்வர்ண லிங்கம்

தங்கத்தால் உருவானது. முக்தி அளித்து பிறவா நிலைக்கு உயர்த்தும்.

### ரஜத லிங்கம்

வெள்ளி லிங்கம். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.

### பித்தாலா லிங்கம்

பித்தளையால் உருவாக்கப்படும் இது, பழுத்த இலை மரத்திலிருந்து உதிர்வது போன்ற பயமில்லாத மரணத்தைத் தரும்.

### திராபு லிங்கம்

தகரத்தால் செய்யப்படும் இந்த லிங்கம், வணங்குபவருக்கு எதிரிகளே இல்லாமல் செய்து விடும் தன்மை உடையது.

### ஆயச லிங்கம்

கந்தக அமிலத்தால் செய்யப்படும் இந்த லிங்கம் எதிரிகளின் தொந்தரவை அழிக்கும்.

### சீசா லிங்கம்

வெள்ளீயத்தால் செய்யப்படுகிறது இந்த லிங்கம். இதை வணங்குபவர்களை எதிரிகளால் நெருங்கவே முடியாதவாறு செய்யும் தன்மையது.

### அஷ்டதாது லிங்கம்

எட்டு வகையான தாதுக்களால் உருவாக்கப்படும் இது, சித்தி அளிக்கவல்லது.

### அஷ்ட லோக லிங்கம்

எட்டு வகையான உலோகங்களால் செய்யப்படும் இதை வணங்கினால் தொழுநோய் குணமாகும்.

### வைடூர்ய லிங்கம்

நவ ரத்தினங்களுள் ஒன்றான வைடூரியத்தால் உருவான இது, எதிரிகளின் எதிர்பாராத தாக்குதலிலிருந்து காப்பாற்றும்.

### ஸ்படிக லிங்கம்

ஸ்படிகத்தால் ஆன இது, எல்லா ஆசைகளையும் நிறைவேற்றும்.

### பாதரச லிங்கம்

பாதரசத்தால் ஆனது இந்த லிங்கம். அளவிட முடியாத செல்வத்தைக் கொடுக்கும்.

மேற்கூறிய லிங்க வகைகளில் 19 லிங்கங்கள் க்ஷணிக லிங்க வகையைச் சேர்ந்தவை. மற்றவை மனுஷ்ய லிங்க வகையைச் சேர்ந்தவை. இந்திரன் மணி மாய லிங்கத்தையும், சூரியன் தாமரமய லிங்கத்தையும், சந்திரன் முக்தி லிங்கம் எனப்படும் முத்துகளால் ஆன லிங்கத்தையும், குபேரன் ஹேம லிங்கம் எனப்படும் தங்கத்தால் ஆன லிங்கத்தையும் அணிந்திருப்பதாகப் புரா ணங்கள் கூறுகின்றன.

சி.ஷ்யாம் சுந்தர்

# புத்திர தோஷங்கள்

## காரணங்களும் பரிகாரங்களும்

புத்திர தோஷங்கள் பொதுவாக 8 காரணங்களால் ஏற்படுவதாகக் கூறுகின்றனர் நமது முன்னோர்கள். ஆனால் அந்த எட்டு காரணங்களைத் தவிரவும் இன்னும் பல காரணங்களால் புத்திர தோஷம் பீடிக்கிறது என்று கூறுபவர்களும் உண்டு. அந்த வகையில், புத்திரதோஷங்கள் எப்படி எதனால் ஏற்படுகின்றன? அதில் முக்கியமான எட்டுவித புத்திர தோஷங்கள் பற்றி நாம் பார்ப்போம்.

1. சர்ப்பசாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
2. பித்ரு சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
3. மாத்ரு சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
4. சகோதர சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
5. மாதுல சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
6. பிராம்மண சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
7. பத்தினி சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்
8. மந்திர சாபம்,பிரேத சாபத்தால் ஏற்படும் புத்திர தோஷம்

இந்த தோஷம் எப்படி செயல்படுகின்றது? குழந்தை பிறந்த சில நாட்களில் இறந்து போவது, பாசமுள்ள பிள்ளைகள் பிறந்து வளர்ந்து இளைஞர், இளம் பெண்ணாக இருக்கும்போது திடீரென இறந்து போவது; பெண் குழந்தைகளுக்கு கல்யாணம் தள்ளிப்போவதால் காலங்கடந்து கல்யாணம் நடப்பது, திருமணம் முடிந்து சில காலத்திற்குள்ளாகவே வாழாவெட்டியாக பெற்றோர் வீட்டிற்குத் திரும்புவது; மூளை வளர்ச்சியின்றி குழந்தை பிறப்பது.

சரி! எந்த காரணங்களால் இந்த புத்திர தோஷங்கள் உருவாகின்றன? முற்பிறவியில் பெற்ற தாய் தந்தையரை சரியாக கவனிக் காததாலும், அவர்களை வேதனைப் படுத்தியதாலும், அவர்களின் கடைசிக்காலத்தில் சரியான நேரத்தில் உணவு தராமலும் ஏற்படுவது பித்ரு அல்லது பிதுரு சாபம்.

இதனால் இப்பிறவியில் தன் தந்தையரோடும் தன் பிள்ளைகளோடும் ஒத்துப்போக முடியாது. எப்போதும் ரத்த உறவுகளான அப்பா மற்றும் பிள்ளைகளால் அவமானமும்,வேதனையும் தினசரி நடவடிக்கைகளாகும்.

சகோதரர்களுக்குச் சேரவேண்டிய சொத்துக்களைத் தராமல் வஞ்சகம் செய்து எடுத்துக்கொள்வதாலும், சகோதரர்களைக் கொடுமைப்படுத்துவதாலும் ஏற்படுவது சகோதர சாபம். அந்த சாபத்தால் புத்திர தோஷம் ஏற்படுவது. சொத்துப்பிரச்னையில் தாய்மாமனை அவமானப்படுத்தியும்,சண்டை போட்டும் தாய் மாமன் சாபத்தால் ஏற்பட்ட புத்திரதோஷம். இந்த சாபத்தால் தாய்வழிப்பகையும்,புத்திரர்கள் பகையும் அவமானமும் ஏற்படும்.பெண் பிள்ளைகள் வாழாவெட்டியாவதும், விவாகரத்து ஆகி வாழ முடியாமல் தவிப்பதும் இந்த சாபத்தால் ஏற்படுகின்றது.

சாதுக்கள்,மகான்களையும் சிவனடியார்களையும் அவமானப்படுத்துவதால் ஏற்படுவது பிராம்மண சாபம். இந்த சாபத்தால் ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பது, மூளை வளர்ச்சி இல்லாத பிள்ளைகள் பிறப்பது, ஊமை, குருடு, செவிடு போன்ற குறையுள்ள குழந்தைகள் பிறப்பதும் ஒரு வித ஆனால் கடுமையான புத்திர தோஷம்.

மனைவியைக் கொடுமைப் படுத்துவதாலும், மனைவி குழந்தைகளை விட்டுவிட்டு வைப்பாட்டி வீடே கதி என இருப்பதாலும், பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து விலகி குடும்பத்தை விட்டுப் பிரிவதாலும், மனைவியின் மனம் கொதித்து அந்த சாபத்தால் ஏற்படுவது பத்தினி சாபம். இதனால், மனைவி மக்களால் அவமானப்படுதலும், பண்டாரம், பரதேசியாகி பிச்சை எடுத்தலும், கடைசிக்காலத்தில் தன்னைக் கவனிக்க ஆளில்லையே என வருந்துதலும், குடும்பத்தோடு இருந்தாலும் குடும்பத்தை விட்டுப் பிரிந்துபோய் அனாதையாக இறந்து போகுதலும் ஏற்படும்.

மந்திர சாபம், பிரேத சாபம் இவற்றால் ஏற்படும் புத்திர தோஷம் என்பது மாந்தீரிகர்களைத் தேடிப் போய் நமக்கு வேண்டாதவர்களுக்கு பில்லி சூனியம் வைப்பதும், குல தெய்வத்தை மறந்து வணங்காமல் இருப்பதும் ஆகும். இந்த சாபத்தால் மருத்துவத்துக்குப் புலப்படாத நோய்கள் உருவாகுவதும், சம்பாதிக்கும் பணம் முழுவதும் அதற்கே செலவழிப்பதும், குடும்பம் விருத்தியில்லாமல் இருப்பதும், தொழில் நட்டம், தொழில் அமையாமலிருப்பது, பிள்ளைகளால் ஏற்படும் ஊதாரித்தனம், துஷ்ட குணமுள்ள பிள்ளைகளால் வரும் பிரச்னைகள் போன்ற பலன்கள் ஏற்படும். இந்த புத்திர தோஷத்தை நீக்கிட பரிகாரம் என்ன? எப்படிச் செய்வது? குருபகவானுக்கு வியாழக்கிழமையன்று அர்ச்சனை செய்யலாம்.

வியாழக்கிழமை திருச்செந்தூரில் அன்னதானம் செய்யலாம். எந்தக்கிரகம் புத்திர தோஷத்தை உருவாக்கியதோ அந்த கிரகத்தின் திசை அல்லது புக்திகாலத்தில் அந்தக் கிரகத்தின் அதிதேவதைக்கு அர்ச்சனை செய்யலாம். குலதெய்வம் கோவிலில் அவரவர் ஜன்ம நட்சத்திரம் அல்லது பவுர்ணமி அல்லது தமிழ் மாதப்பிறப்பு அல்லது தமிழ் வருடப்பிறப்பு அன்று அன்னதானம் ஒரு வருடம் வரை அல்லது ஆயுள் முழுவதும் செய்துவரலாம். நமது பாவத்தை நாம் தான் சுமக்கிறோம். அதுபோல, நமது பரிகாரத்தை நாம்தான் நேரடியாகச் செய்ய வேண்டும்.



bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com
SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,
89394 99598
New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.


ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

# அனைவரும் அவசியம் கடைபிடிக்க வேண்டிய சந்தியா வந்தனம்

சந்தி என்றால் இரவும் அதிகாலையும், காலையும் மதியமும்., மாலையும் இரவும் ஒன்றை ஒன்று சந்திக்கும் நேரம் அப்படிபட்ட சந்தியாகாலத்தில் நமக்கு பிரத்திட்சமாக தோன்றும் ஜோதியான சூரியனை பிரார்த்தித்து செய்யக்கூடிய வந்தனம் சந்தியாவந்தனம் எனப்படும்.

சந்தியாகாலம் என்பது அதிகாலை, மத்யான்னம் சாயங்காலம் என்னும் மூன்று காலங்கள் ஆகும். சந்தியாவந்தன காலத்தில், ஆசமனியம், பிராணாயாமம், சங்கல்பம், அர்க்யப்ரதானம், காயத்ரீ ஜபம், மற்றும் உபஸ்தானம் என்ற ஆறு கர்மாக்கள் செய்ய வேண்டும் என்பது ப்ரதானமாக உள்ளன.

## ஆசமனியம்:

ஆசமனியம் என்பது சுத்தமான தீர்த்தத்தை எடுத்து, அச்சுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம: என கூறியவாறே மூன்று முறை தீர்த்தத்தை ஸவீகரிப்பதை ஆசமனியம் எனப்படும்.

## பிராணாயாமம்:

நம் உடலில் செல்லும் மூச்சுக் காற்றை முறைபடைத்தி வெளியே விடுதல் என்பதை பிராணாயாமம் என்று கூறலாம். அதாவது முதலில் மூச்சை நன்கு வெளியில் விட்டு பின்பு வலது பக்க துவாரத்தை கட்டை விரலால் அழுத்தி மூடிக்கொண்டு இடது பக்க மூச்சு துவாரத்தினால் மூச்சை உள்ளிழுத்து இடது பக்க மூக்கை மோதிரவிரலாலும் சுண்டுவிரலாலும் அடைத்துக் கொண்டு

“ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ:
ஓம் ஜந: ஓம் தப: ஓகும் சத்யம்:
ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோ
தேவஸ்ய தீமஹி தியோயோந ப்ரசோதயாத்
ஓமாப: ஜ்தோதிரஸ அம்ரதம் ப்ரம்ம
பூர்புவஸ்ஸுரோம்”

என்று நிதானமாக சொல்லி முடிக்கும் வரை மூச்சை மூக்குனுள் வைத்து (இதை கும்பகம் என்பர்) பின் மெதுவாக கட்டைவிரலை நீக்கி வலது பக்க மூக்கால் வெளியிடுவது ( இதை ரேசகம் என்பர்) என கூறி முடிக்கும் போது வலது காதை தொடவேண்டும், எந்த ஒரு அசுத்த செயலை செய்யும் போது நீர் கிட்டவிட்டால் வலது காதை தொட்டால் நாம் சுத்தமாவதாக சாஸ்திரம் கூறுகிறது.

## சங்கல்பம்:

சந்தியாவந்தனம் எந்த நேரத்திற்காக செய்கிறோமோ அந்த காலத்திற்கான பிராத்தனை

## அர்க்ய ப்ரதானம்:

அர்க்ய ப்ரதானம் என்பது தீர்தம் மூலம் சூரியனுக்கும் கேசவாதிகளுக்கும் தகப்பானாரில்லாதவர்கள் பிதுர்களுக்கும் மந்திரமாக அந்த தீர்த்தத்தை அர்பணிப்பது இதை கட்டை விரலும் ஆள்காட்டி விரலும் சேராமல் இரண்டு கைகளாலும் சூர்யனை பார்த்து விட வேண்டும். இந்த அர்க்யம் விடுவதன் காரணம், மந்தேஹர் என்ற பெயருள்ள முப்பது கோடி கோர வீர குரூர ராக்ஷஸர்கள் இந்த ஸந்தியா காலங்களில் சூரியனை விழுங்க வருவார்கள் அவர்களிடமிருந்து சூரியனை காப்பாற்ற தேவர்களுக்கு ரிஷிகளும் தபஸிகளும் ஸந்தியாகாலத்தில் அர்க்யத்தை விடுவர் அது வஜ்ராயுதமாக மாறி சூரியனுக்கு உதவுமாம் எனவே தான் பூமியில் பிராமணர்களும் மற்றவர்களும் செய்கிறார்கள் என்பர்

சந்தியா வந்தனத்தை யாரெல்லாம் செய்யலாம்? பிராமணர்கள் வாணியன் குயவன் சத்ரியன் என எல்லோருமே செய்யலாம் காலங்களின் மாற்றத்தால் நம்மில் பெரும்பாலனவர்கள் உட்பட யாரும் செய்வதில்லை

## காயத்ரி ஜெபம்:

ஒருவனின் சந்தியாவந்தனத்தில் காயத்ரீ ஜபம் முறையாக செய்யும்போது அவனுக்கு நான்கு வேதங்களையே சொல்லிய பலன் கிடைப்பதால் காயத்ரீ ஜபத்தைத் தான் சந்தியாவந்தனத்தில் ஜபிக்க வேண்டும் என சாஸ்திரம் கூறுகிறது. இந்தக் காயத்ரீ மந்த்ரம் 24 அக்ஷரங்களைக் கொண்டு, 24 ரிஷிகளையும், அக்னி முதலிய 24 தேவதைகைகளையும், 24 சந்தஸ்களையும், 24 தத்துவங்களையும் மற்றும் 24 சக்திகளையும் கூறுகிறது. காயத்ரி ஜெபத்தை 108, 54 அல்லது 27 முறை கால சௌகரியத்திற்கேற்ப்ப முறையாக ஜபிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வேக வேகமாக இடைவெளி இல்லாமல் ஜெபிக்கக் கூடாது. சத்தமாகவோ உதட்டில் முணுமுணுப்பாகவோ சொல்லக்கூடாது மனத்திற்க்குள் மட்டுமே சொல்லவேண்டும்.



## கொடிமரத்தைப்பற்றி...

சிவன் கோயிலில் நந்தியையும், பெருமாள் கோயிலில் கருடனையும், அம்பாள் கோயிலில் சிங்கத்தையும், முருகன் கோயிலில் மயிலையும், விநாயகர் கோயிலில் மூஞ்சுறுவையும், சாஸ்தா கோயிலில் குதிரையையும் கொடி மரத்தின் மேல்பகுதியில் அமைத்திருப்பார்கள். துவஜஸ்தம்பம் எனப்படும் கொடிமரத்தில் திருவிழாவின் முதல்நாள் கொடியேற்றுவது துவஜாரோகணம் என்றும், விழா முடிந்து கடைசி நாள் கொடியிறக்குவது துவஜாவரோகணம் என்றும் அழைக்கப்படுகிறது. கொடிமரத்தின் முன் ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். கொடி மரத்தைக் காக்கும் பொருட்டு பித்தளை, செம்பு போன்ற உலோகங்களால் கவசமணிவிப்பர். இதனால் வெயில், மழை போன்ற இயற்கை மாற்றங்களிலிருந்து கொடி மரம் காக்கப்படுகிறது.



## கோவில்களில் இறைவனை வணங்க

# சாஸ்திரங்கள் கூறும் வழிமுறைகள்

கோயில்களுக்கு சென்று இறைவனை வணங்கும் போது முக்கியமான மூன்று வழிமுறைகள் உள்ளதாக ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**உத்தம நமஸ்காரம்:** லட்சுமி வாசம் செய்யும் வேதரேகைகள், மந்திர உபதேசங்கள் நிறைந்த நமது இரண்டு கரங்களை இணைத்து, இதயத்திற்கு அருகில் மார்பிற்கு நேரே மையத்தில் வைத்து, மனதில் மட்டுமே மந்திரங்களைக் கூறிஇறைவனை ஒருநொடியேனும் மனதார வணங்க வேண்டும். மனிதனின் ஆத்ம இருப்பிடமான இதயத்தில் இருந்து வணங்குவதை இறைவன் செவிசாய்த்து கேட்பான் என்பது ஐதீகம்.

**அஷ்டாங்க நமஸ்காரம்:**

இவ்வகையான நமஸ்காரமுறை ஆண்களுக்கு மட்டுமே உரித்தானது. இம்முறையில் அஷ்டாங்கமும் (அஷ்டம் எட்டு; அங்கம் உடற்பாகம்) தரையில் படும்படியாக வீழ்ந்து, இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வணங்க வேண்டும். தலை, முகம், இரண்டு

தோள்பட்டைகள், உடல், இரண்டு முழங்கால்கள் மற்றும் பாதநுனி ஆகிய உடற்பாகங்களை தரையில் படும்படியாக படுத்துக்கொண்டு இறைவனின் திருப்பாதத்தை சரண டைந்தால் வாழ்வில் பாவங்கள் நீங்கி நற்கதி உண்டாகும்.

**பஞ்சாங்க நமஸ்காரம்:**

இந்த நமஸ்காரமுறை பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். இவ்வகை யான வணங்கல் முறையில் பெண்கள் தங்களது பஞ்சாங்கத்தையும் (பஞ்சம் ஐந்து; அங்கம் உடற்பாகம்) இறைவனிடம் முழுமையாக சமர்ப்பணம் செய்து வணங்க வேண்டும்.

இம்முறையில் தலை, இரண்டு முழங்கால்கள் மற்றும் இரண்டு பாதநுனிகளை பூமியில் வைத்து இறைவனை வணங்கிட நற் பலன்கள் கிட்டும்.







விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
உலகின் முதல் மெயில் புத்தகமாக வெளிவரும் நமது மாதமிருமுறை இதழுக்கு விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
முழு பக்க விளம்பரம் ரூ.5,000
அரைப்பக்க விளம்பரம் ரூ.2,500
விளம்பர ஏஜெண்ட்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்
மேலும் விபரங்களுக்கு
8939499598 9677159070 7299992699
நிர்வாக அலுவலகம் aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024
தவறாமல் படியுங்கள்
www.aanmeegamalar.com

# சிவ உபாசனையின் மஹிமை

சிவனென்றால் மங்களமயமான தத்துவம். அவர் சுயம்பு மற்றும் ஸ்வயம்ப்ராகாஸமாய் இருப்பதோடு உலகத்தையும் ஒளிமயமாக்குவதால் அவரே பரபிரம்மம் ஆகிறார். சிவனின் அருளை பெற பக்தர்கள் மகாசிவராத்திரி அன்று ச்ரத்தையோடு உபாசனை செய்கின்றனர்.

ஆன்மீக சாஸ்திரப்படி செய்யப்படும் உபாசை னையால் பக்தியுணர்வு பெருகி அதிக பலன் கிடைக்கின்றது. இப்பயனைப் பெற சிவ உபாசனையின் மஹிமையையும் சாஸ்திரத்தையும் அறிந்துக்கொள்ளளாம்.

## மஹாசிவராத்திரி விரத வழிமுறை

மஹாசிவராத்திரி அன்று மட்டும் இரவில் ஒரு பகுதியில் சிவன் ஓய்வெடுக்கிறார். அப்பொழுது சிவனின் ஸகுண காரியம் நின்று போய் தியான நிலையிலிருந்து சமாதி நிலைக்கு செல்கிறார். சிவன் சுயஸாதனையில் ஈடுபடும் நேரமிது. இக்காலத்தில் உலகத்திலுள்ள தமோகுணத்தை சிவதத்துவம் ஸ்வீகரிப்பதில்லை. அதனால் தமோகுணம் அல்லது தீயசக்திகளின் ஆக்கிரமிப்பு அதிகமாகிறது. இந்த ஆக்கிரமிப்பு நம்மை பாதிக்காமலிருக்க சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும். அதன் மூலம் நம்முள் சிவதத்துவத்தை அதிகரித்து தமோகுணத்தை நசிக்க முடியும்.

## சிவபூஜையில் சில விதிமுறைகள்

மஞ்சள் மற்றும் குங்குமம் உற்பத்தியின் சின்னம்; சிவன் லயத்தின் அதிதேவதையானதால் சிவனுக்கு இவற்றை அர்ப்பணிக்கக் கூடாது.

ஆவுடையாருக்கு சம்பங்கி, ஜாதிமல்லி, குண்டுமல்லிகை, தும்பை போன்ற வெள்ளை மலர்களை, காம்பு ஸ்வாமியை நோக்கி இருக்குமாறு ஸமர்ப்பிக்க வேண்டும்.

தாழம்பூ, மல்லிகை, ஹீனா, தர்பார் சுகந்தத்தை உடைய ஏதாவது 2 ஊதுபத்திகளை ஏற்றி 3 முறை சுற்ற வேண்டும்.

மஹாசிவராத்திரியன்று சிவதத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடக் கூடிய கோலத்தைப் போடவும்!

## நந்தியின் கொம்புகளுக்கிடையே சிவதரிசனம்

சிவலிங்கத்திடமிருந்து அதிக சக்தி வாய்ந்த அதிர்வலைகள் வெளிப்படுவதால், தரிசிப்பவர்களுக்கு உடல் சூடு, தலை பாரம் போன்ற கஷ்டங்கள் ஏற்படலாம். நந்தியின் கொம்புகளுக்கிடையே தரிசனம் செய்வதன் மூலம் தரிசிப்பவர்களின் ஸாத்வீகத் தன்மை அதிகரிப்பதால் இக்கஷ்டங்கள் ஏற்படுவதில்லை.

தரிசன முறை: சிவாலயத்தில் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை நிமிர்த்தி நந்தி உட்கார்ந்துள்ளார். நந்தியின் வலதுபக்கம் நின்று அல்லது உட்கார்ந்து, இடது கையால் நந்தியின் பின்புறத்தைத் தொட்டு வலது கையின் கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல்களை நந்தியின் கொம்புகளில் வைத்து அந்த இடைவெளியில் சிவலிங்கத்தை தரிசிக்கவும்.

## சிவனுக்கு வில்வார்ப்பணம் ஏன்?

வில்வத்திற்கு சிவதத்துவத்தை ஆகர்ஷிக்கக் கூடிய சக்தி அதிகமானதால், வில்வத்தை அர்ப்பணிக்கின்றனர். காம்பு சிவனை நோக்கியும் வில்வதளம் நம்மை நோக்கி இருக்குமாறு அர்ப்பணிக்கவும்.

## சிவலிங்கத்திற்கு பாதி ப்ரதக்ஷிணம் ஏன்?

சிவலிங்க ப்ரதக்ஷிணம் செய்யும்போது அபிஷேகம் விழும் இடம் வரை சென்று அதைத் தாண்டாமல் மறுபடியும் திரும்பி ப்ரதக்ஷிணத்தை முடிக்க வேண்டும். ஆவுடையாரிலிருந்து வெளிப்படும் சக்தியை சாதாரண மனிதர்களால் தாங்க முடியாததால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படலாம்; அதனால் சிவலிங்கத்திற்கு பாதி ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

## சிவராத்திரியன்று சிவனின் நாமஜபம்

மஹாசிவராத்திரியன்று சிவதத்துவம் மற்ற நாட்களைக் காட்டிலும் 1000 மடங்கு அதிகமுள்ளது. அன்று 'ஓம் நமசிவாய' என்ற நாமஜபத்தை அதிக அளவு பக்திபூர்வமாக செய்வ தால் வாயுமண்டலத்திலுள்ள சிவ தத்து வத்தை அதிகம் க்ரஹிக்க முடிகிறது.




ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

'நம: சிவாய' மந்திரத்தின் ஆன்மீக அர்த்தம்

ந: அனைத்து லோகங்களுக்கும் அதிபதி

ம: பரம ஞானமளிப்பவர், மஹாபாதகங்களை நசிப்பவர்

சி: மங்களமளிப்பவர், சாந்தம் மற்றும் அனுக்ரஹம் செய்பவர்

வா: நந்திவாஹனர், வாசுகி மற்றும் வாமாங்கி சக்திகளின் சின்னம்

ய: பரமானந்தரூபம், மங்களத்தின் இருப்பிடம்

## சிவனின் விசேஷத் தன்மைகள்

கங்கா எப்படி சூரிய குடும்பத்தில், சூரியன் நடு நாயகமாக திகழ்கிறதோ அப்படி நம் உடம்பிற்கும் ஆத்மா மூலாதாரமாக விளங்குகிறது. அதே போல் ஒவ்வொரு பொருளின் சைதன்யம் மற்றும் பவித்ரத்தின் நடு மையமாக 'கங்' விளங்குகிறது. "கங்" கின் உற்பத்தி ஸ்தானம் 'கங்கா'. சிவனுடைய சிரஸிலிருந்து கங் பொழிவதால் கங்கை சிவனுடைய சிரஸிலிருந்து வருகிறது என்பது ஐதீகம்.

சந்திரன் சிவனின் தலையை, சந்திரன் அலங்கரிக்கிறது. நேசம், கருணை, தாயன்பு ஆகிய உணர்ச்சிகளின் பிறப்பிடமாக சந்திரன் திகழ்கிறது. ஆகையால், 'சந்த்ரமா' என்கின்ற நிலை, இம்மூன்று உணர்ச்சிகளையும் ஒருங்கே பெற்றதாகிறது.

நெற்றிக்கண் சிவனின் இடது கண் முதற் கண்ணாகவும், வலது கண் இரண்டாவது கண்ணாகவும், புருவ மத்தியில் ஸூட்சமமாக உள்ள நெற்றிக் கண் மூன்றாவது கண்ணாகவும் கருதப்படுகிறது. மேல் நோக்கி நீண்டிருக்கும் மூன்றாவது கண், மற்ற இரு விழிகளின் கூட்டு சக்தியை பிரதிபலிக்கிறது. தெய்வீக சக்தியின் இருப்பிடமாக திகழ்கிறது. அதற்கு, 'ஜோதிர்மட்' 'வியாசபீட' என்றும் சில பெயர்கள் உள்ளன.

நாகம் சிவனின் மற்றொரு பெயர் 'புஜங்க பதிஹாரி'. 'புஜங்க' என்றால் நாகம். அதாவது தூய்மையான பொருள், 'பதி' என்றால் பேணி பாது காப்பவன், 'ஹாரி' என்றால் கழுத்தில் ஹாரத்தை அணிந்திருப்பவன்.இதிலிருந்து புஜங்கபதிஹாரி என்பவன் தூய்மையான பொருளை பேணி பாதுகாத்து, தன் கழுத்தில் மாலையாக அணிந்து கொள்பவனாகிறான்.



மேலோட்டமான பார்வைக்கு, அவை நாகங்களாக தெரிந்தாலும், உண்மையில் அவை ஒரு விதமான ஏணிகளாக பயன்படுகின்றன. அவற்றின் வாலைப்பிடித்துக் கொண்டோமேயானால் விரைவில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும்.

பஸ்மா (விபூதி) எது பிறந்து, முடிவில் சாம்பலாகிறதோ, அதற்கு பஸ்மா என்று பெயர். பூமியிலுள்ள எல்லா உயிர்களும், இந் நெருப்பிலிருந்து பிறந்து, பின்பு நெருப்பிலேயே ஐக்கியமாகின்றன. சரீரம் அழியக்கூடியது. அதனைத் தொடர்ந்து நினைவுறுத்தும் சின்னமே பஸ்மம், என்பதே பஸ்மத்தின் உள்ளர்த்தம்.

ருத்ராக்ஷம் ருத்ரா+அக்ஷ ருத்ராக்ஷா ஆகின்றது. 'அக்ஷ' என்றால் 'கண்', ருத்ரா+அக்ஷா என்றால், எது எல்லாவற்றையும் பார்த்து காரியங்களை செய்கின்றதோ அதைக் குறிக்கும் (உதா. மூன்றாவது கண்), அக்ஷாவின் இன்னொரு அர்த்தம் 'அச்சாணி'. கண், ஒரு அச்சாணியைக் கொண்டு சுழல்கிறது. அதனால் கண்ணிற்கும் அக்ஷ என்று பெயருண்டு. ருத்ராக்ஷம் பீஜம் ஆகும். அது என்றும் குறைவதில்லை. ஆத்மாவும் அவ்வாறேதான். 'ருத்ராக்ஷம், ஆத்மாவின் சின்னமாகும்'. ருத்ராக்ஷம் சிவப்பு நிறமாகவும் மீனை போல் தட்டையாகவும் காட்சியளிக்கிறது. அதில் மஞ்சள் நிறத்தில் கோடுகள் உள்ளன. அதன் ஒரு பக்கத்தில், வாயைப் போன்ற ஒரு பிளவு காணப்படுகிறது, ருத்ராக்ஷம் ஸாத்வீக அதிர்வுகளை க்ரஹிக்கவும், வெளியிடவும் செய்கிறது, உண்மையான ருத்ராக்ஷம் நம் விரல்களால் உணர முடியும். அச்சமயம், அது வெளியிடும் நல்ல அதிர்வுகளை நாம் க்ரஹித்துக் கொள்கிறோம். புலித்தோல் புலி, (ரஜ, தம குணங்களின் சேர்க்கை), கொடூரத் தன்மையை குறிக்கின்றது. சிவன் இத்தகைய புலியைக் (ரஜ தம) கொன்று, தனது ஆசனமாக்கியிருக்கிறார்.

## சிவனின் மனித ரூபத்தில் நான்கு விதமான ஆபரணங்கள் உள்ளன

டமரு இது சப்த ப்ரமத்தைக் குறிக்கின்றது. இதிலிருந்து மூல ஒலியான 52 எழுத்துக்களும், 14 மஹேச்வர ஸூத்திரங்களும் உருவாயின. இதன் மூலம் வர்ணமாலா உருவானது. பின்னர் ப்ரபஞ்சம் இதிலிருந்து தோன்றியது.

திரிசூலம் திரிசூலத்தின் மூன்று பிளவுகள் குறிப்பதாவது

அ. மூன்று குணங்களாகிய சத்வ, ரஜ, தம

ஆ. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றுக்கு அடித்தளமாக விளங்குவது.

இ. விருப்பம், ஞானம், செயல்பாடு.

பாசம் (அல்லது) மான் பாசம் என்பது காலபாசத்தைக் குறிக்கிறது. மான் நான்கு வேதங்களை குறிக்கின்றது.

பரசு இது அறியாமையை அடியோடு வேரறுக்கும் சின்னமாக விளங்குகின்றது.



மஹாசிவராத்திரியின் போது சிவதத்துவம் மற்ற நாட்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக செயல்பாட்டில் உள்ளது. சிவதத்துவத்தின் அதிகபட்ச லாபம் பெற, மஹாசிவராத்திரியன்று சிவனுக்கு பக்திபூரணமாக பூஜை, அர்ச்சனை செய்து, ஓம் நம: சிவாய நாமஜபத்தை அதிக அளவு செய்ய வேண்டும். நம: சிவாய என்பது சிவனின் பஞ்சாக்ஷர மந்திரமாகும்.

## சிவனிடம் செய்ய வேண்டிய சில பிராத்தனைகள்

ஹே மஹாதேவா, உன்னைப்போன்ற வைராக்கியம் என்னிடமும் நிர்மாணம் ஆகட்டும்.

ஹே சிவசங்கரா, தீய சக்திகளின் தாக்குதலிலிருந்து நீ என்னைக் காப்பாற்று, உன்னுடைய நாமஜபமாகிய பாதுகாப்பு கவசம் எப்பொழுதும் என்னைச் சுற்றி இருக்கட்டும். இதுவே உன் சரணங்களில் நான் செய்யும் பிராத்தனை.

தகவல் ஸனாதனின் நூல் 'சிவன்' மற்றும் www.hindujagruti.org/hinduism/vrat/mahashivratri

தொடர்பு : 9380949626



# குருஷேத்திரப் போரில் தர்மர் வணங்கிய

# பகலாமுகி

சத்ய யுகத்தில் ஒரு முறை மகா பிரளையம் ஏற்பட்டு பூலோகமே அழிந்து விடும் நிலைக்கு வந்தது. இதனால் கவலை கொண்ட விஷ்ணு சௌராஷ்டிரத்தில் ஒரு இடத்தில் சென்று தனிமையில் அமர்ந்தார்.

அப்போது ஆகாய மார்கமாக வந்த ஒரு நட்சத்திர ஒளியும் அவருடைய நாபியில் இருந்து வெளிவந்த ஜோதியும், சேர்ந்து ஒரு தேவி தோன்றினாள். அந்த மகா பிரளயத்தின் சீற்றத்தை அடக்கி உலகை அழிவில் இருந்து காப்பாற்றத் தோன்றிய அவளே பகலாமுகி தேவி.

முற்காலத்தில் நாடோடிகளும் மலை வாழ் மக்களும் நிறைந்த மக்கள் இருந்த இடங்களில் தந்திர மந்திர சக்தியை உள்ளடக்கிய ஆலயங்கள் பல இருந்தன. எந்தவிதப் பகட்டும் இல்லாமல் ஒரு கிராம தேவதையின் பீடம் போன்ற அமைப்பைக் கொண்டு இருந்த இக்கோவில்களில் அக்கால மன்னர்கள் தாங்கள் போரில் வெற்றி பெற வேண்டி வணங்கி பூஜைகளைச் செய்து வந்தனர்.

அவ்வாறாக மந்திர தந்திர சக்திகளைப் பெரும் அளவில் நம்பி அத்தகைய கோவில்கள் பலவற்றை அவர் ஆண்டு வந்த மத்யப்ரதேசதில் நிறுவியதாகக் கருதப்படும் மன்னன் விக்கிரமாதித்தன் தன்னால் நிருவப்பட்டதாகக் கருதப்படுவதே இந்த பகலாமுகி தேவிக்கு அமைக்கப்பட்டுள்ள ஆலயம். இவ்வாலயம் உஜ்ஜயினியில் இருந்து சுமார் 90 கி.மீ. தொலைவில் உள்ள நல்கேடா என்ற சிற்றூரில் நர்மதை நதியின் கரையயில் உள்ளது. இந்த ஆலயத்தில் உள்ள தேவியின் சிலை சுயம்பு வடிவானதாகவும், 2500 வருடங்கள் பழமையானதாகவும் அந்த ஆலயத்தைப் பற்றி சிறு வரலாறு அங்குள்ள ஒரு கல்வெட்டில் இருந்து தெரிய வருகின்றது. உஜ்ஜயினியைத் தவிர மத்தியப் பிரதேசத்தின் ததியா எனும் கிராமத்திலும், ஹிமாச்சலப் பிரதேசத்திலும் பகலாமுகிக்கு ஆலயங்கள் உள்ளதாகக் குறிப்புகள் உள்ளன.

புராணச் செய்திகளின் அடிப்படையில் மகாபாரதப் போரின் பொழுது குருஷேத்திரத்தில் நடைபெற்ற யுத்தத்தில் பாண்டவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தர்மர் பகலாமுகி தேவியை வழிபட்டார் என்றும் கூறுகின்றனர்.

**தேவியின் ஸ்வரூபம்:**

ஒரே கல்லில் மூன்று முகங்களைக் கொண்ட தேவிக்கு ஒரு முகத்தில் மூன்று கண்கள் உள்ளன. ஆகவே மும்மூர்த்திகளை





உள்ளடக்கிய சிவபெருமானின் அவதாரமே அந்தச் சிலை என்றும் அர்தநாரீஸ்வரரைக் குறிக்கும் வகையிலேயே அச்சிலை உள்ளது என்றும் கூறுவார்.

மஞ்சள் நிறத்தில் காட்சி தரும் பகலா தேவியின் மேனி பொன்னிறமானது. தங்க நிறத்திலான சிம்மாசனத்தில் அமர்ந்த அவளே மந்திர தந்திர சக்திகளின் தெய்வம் ஆவாள்.

**தேவியின் மந்திரம்:** ஓம் ஹலீம் பகலாமுகி

இந்த மந்திர உச்சாடனைகள் தகுந்த முறையுடன் அதற்கான விதிகளுடன் உச்சரிக்காவிடில் ஆராதிப்பவரையே அழித்துவிடும் வல்லமை வாய்ந்ததாகும். அவளுடைய மந்திர தந்திர சக்தியை நிரூபிக்கும் பொருட்டு ஒரு கதை உள்ளது.

அதாவது மதன் என்றொரு அரக்கன் மிகுந்த சக்திகளைப் பெற்றவன். குறிப்பாக வாக்கு சித்தியைப் பெற்றவன் ஆதலால் எவர் எந்த மந்திரங்களை ஓதினாலும் அது நடைபெறாமல் போகுமாறு தன்னுடைய வாக்கு சித்தியால் அதைத் தடுத்துக்கொண்டு இருந்தான். தேவர்களின் மந்திரங்களும் பலிக்காமல் போயின. எனவே பத்து மந்திர தந்திர சக்திகளைத் தரும் தேவிகளான தச மஹா வித்யா தேவிகளில் ஒருவளான பகலாமுகியிடம் சென்று அனைவரும் முறையிட்டனர்.

அன்னையும் அந்த அசுரனுடன் போரிட்டு அவனுடைய வாக்கு சக்தியை அழிக்கும் பொருட்டு அவன் நாக்கை இழுத்து அறுக்க முற்பட்டபோது அந்த அசுரன் பகலாமுகியை மனதார வேண்டினான். இதனால் மனமிரங்கிய தேவி அவன் இறக்கும் முன் அவனுடைய இறுதி ஆசையை நிறைவேற்றுவதாக உறுதி கொடுத்தாள்.

அந்த அசுரன் வேண்டிக்கொண்டபடி அவனை வதம் செய்யும் காட்சியுடன் இருக்கும் தன்னைத் தனது பக்தர்கள் அந்தக் கோலத்திலேயே வழிபட வேண்டும் என்று கூறி அவனுக்கும் முக்தியும் கொடுத்தாளாம்.

**தேவியின் மகிமை:**

உண்மையான நம்பிக்கையுடன் அவளைத் துதிப்பத்தின் மூலம் எதிரிகளின் செயல்கள் அனைத்தும் அடங்கி விடும், தடைகள் விலகிவிடும், எடுத்த காரியம் வெற்றி பெறும், பில்லி சூனியம் போன்ற ஏவலை செய்பவர்களின் வாக்கையும் சிந்தையும் அடியுடன் சிதைக்கச் செய்யும் வல்லமை வாய்ந்தவள் இந்த பகலாமுனி தேவி.

இராமாயணத்தில் லட்சுமணனை வீழ்த்த இந்திரஜித் வணங்குவான் ஆனால் பகலாமுகி தேவி லட்சுமணனுக்கே உதவி புரிந்தாள் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது.





www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# குழந்தைகளின் கல்விக்கும், பேய் பிசாசு பயத்தையும் போக்கும் சுதர்சன சக்கரம்

வீட்டில் அனேக பிரச்சனைகளால் அவதிப்படுபவர்களும், குழந்தைகளின் கல்வி கற்கும் திறன் அதிகரிக்கவும், பேய், பிசாசு பயம் உள்ளவர்களும் தங்களுக்கு ஏற்பட்ட பயத்தை போக்கி, குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவேண்டுமானால் ஸ்ரீசுதர்சன சக்க ரத்தை வீட்டில் வைத்து வழிபட்டால் மேற்கண்ட அனைத்து பிரச்சனைகளும் எளிதாக தீர்ந்து விடும்.

திருமால் தனது கையில் வைத்திருக்கும் சக்கரமே 'சுதர்சன சக்கரம்' என்று அழைக்கப்படுகிறது. சுதர்சனரை சக்கரத்தாழ்வார் என்றும் போற்றுவார்கள். இவர் திருமாலின் தசாவதாரங்களில் வராக அவதாரம் மற்றும் நரசிம்ம அவதாரங்களின் குணங்களை ஒருங்கே பெற்றவர். பக்தர்களுக்கு ஞானத்தைத் தந்து பயத்தை அழிக்கும் தன்மை கொண்டவர். சுதர்ச னருக்கு எட்டு முதல் 32 கரங்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

தீமை செய்பவர்களை அழிப்பது இவரது பணிகளில் ஒன்று. இந்திரத்துய்மன் என்பவன் யானையாக பிறந்த போது, கூடு என்பவன் முதலையாகப் பிறந்தான். இறை பூஜைக்காக பூப்பறிக்கச் சென்ற யானையின் காலை, குளத்தில் இருந்த முதலை கவ்விக்கொண்டது. அப்போது திருமால், சுதர்சனரை அனுப்பியே முதலையைக் கொன்றார் என்பது புராண வரலாறு. கிருஷ்ண பகவானை பழித்து பேசிய சிசுபாலனைக் கொன்றதும், துர்வாச முனிவரை விரட்டி அவரது கர்வத்தை அகற்றியதும் சுதர்சனர்தான்.

இவரை ஆலயங்களில் வழிபடுவதுடன், வீட்டில் எந்திர வடிவில் வைத்தும் வழிபாடு செய்யலாம். பூஜை செய்யும் பொழுது, அபிஷேகம் அர்ச்சனை, சுதர்சன அஷ்டகம் முதலியவற்றைச் சொல்லி கற்பூர தீபம் காட்டும் பொழுது சுதர்சனருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரிப்பது உத்தமம். இந்த மந்திரத்தை தினமும் 108 தடவைச் சொல்லி வருவது பல்வேறு நன்மைகளை வழங்கும்.

சுதர்சன காயத்ரி மந்திரம்:

'ஓம் சுதர்ஹநாய வித்மஹே
மஹாஸ்வாலாய தீமஹி
தன்னோ சக்ரஹ் ப்ரசோதயாத்'

இந்த காயத்திரி மந்திரத்தின் பொருள்:

திருமாலின் கரங்களை அலங்கரிக்கும் சுதர்சனரை அறிந்து கொள்வோம். மகா ஜூவாலையாகத் திகழும் சுதர்சனர் மீது தியானம் செய்வோம். தீமையை அழிக்கும் அவர் நம்மை காத்து அருள்புரிவார் என்பது இதன் பொருள்.

சுதர்சனருக்கு அபிஷேகம் அர்ச்சனை, பூஜை செய்து, காயத்ரி மந்திரத்தை தினமும் 108 தடவைச் சொல்லி வருவது பல்வேறு நன்மைகளை வழங்கும்.

இந்த காயத்ரி மந்திரத்தை உச்சரித்து, சுதர்சன பெருமாளை வழிபாடு செய்து வந்தால் பயம் நீங்கி ஞானம் பிறக்கும். கல்விச் செல்வமும், பொருட்செல்வமும் கிடைக்கும். திருமாலின் அருளையும் பெறலாம். ஆயுள், ஆரோக்கியம் நீடிக்கும்.







## மற்றவர்களும் பயன்பெற

# அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 8,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

aanmeegamalar@gmail.com

whatsapp: 7299992699





**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

# மிகச்சிறப்பான உறவு 'நட்பு'

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

பாகம் 4

பரமஹம்ஸர் கூறுகிறார்:

"நண்பர்களிடையே நிலவும் உறவுதான் மனித அன்புகளிலேயே மிகச்சிறப்பானது, நட்பில் வெளிப்படும் அந்த அன்பில் பாலினக்கவர்ச்சி இல்லை. ஒருவர் நட்பின் மூலம் தெய்வீக அன் பை உணர விரும்பினால் பிரம்மச்சரியத்தை அவசியம் கடைபிடித்து பாலுணர்வை அறவே மறக்கவேண்டும், அப்பொழுது நட்பு தெய்வீக அன்பின் வளர்ச்சியை பேணுகிறது. இத்தகைய அன்பு மகான்களிடையேயும் இறைவனை நேசிக்கும் மனிதர்களிடையேயும் மிளிர்ந்திருக்கிறது. ஒரு முறை நீங்கள் தெய்வீக அன்பை உணர்ந்தீர்களானால் என்றுமே அதை நீங்கள் விட்டுப்பிரிய மாட்டீர்கள். ஏனெனில் இந்த முழு பிரபஞ்சத்திலும் அதைப்போன்று வேறு எதுவும் இல்லை"

தாய் தந்தையர் அன்பு, கணவன் மனைவி அன்பு, சகோதரர்களிடையே உள்ள அன்பு போன்றுதான் நண்பர்களிடையேயும் தெய்வீக அன்பைக் காணலாம். தன் நண்பனுக்காக உயிரையும்கூட கொடுக்கத்தயாரான பல நிகழ்வுகள் உள்ளன. எல்லா உறுவும் ஒன்றே. எல்லா மனிதர்களிடத்திலும் ஒரே இறைவன் குடியிருக்கும்போது அந்த உற வும் அன்பும் மாறாதல்லவா!"உயிர் காப்பான் தோழன்" என்ற வாக்கியம் நண்பனுக்காக உருவானது. உண்மையும் அதுதான். சில சமயங்களில் எதையும் எதிர்பாராமல் தோழனுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராவது அந்த தெய்வீக அன்புக்காக, அல்லது உண்மையான அன்புக்காகத்தான். அதுதான் உண்மையான நட்பு. அந்த நட்பை பால்யகால நண்பனாகிய குசேலனிடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் காட்டுகிறார்.

குருகுலவாசம் முடிந்து கிருகஸ்தாசிரமத்திற்கு வந்து பல வருடங்களாகியும் அவர்களுடைய நட்பு கடுகளவுகூட மாறாமலிருந்தது. "கிருஷ்ணன் துவாரகாவிற்கு சக்கரவர்த்தி; ஆனால் நானோ ஒரு பரம ஏழை; கிருஷ்ணன் என்னை ஞாபகம் வைத்திருப்பாரோ"என்று எண்ணிக்கொண்டு அவர் கண்ணனைக் காணச் சென்றார். ஆனால் அவர் நினைத்தற்கு மாறாக நடந்தது. குருகுலவாசத்தின்போது எந்த அளவில் நட்பு இருந்ததோ அதே நட்புதான் அவர்கள் இருவருடைய சந்திப்பின்போதும் இருந்தது. அந்த







உண்மையான நட்பை கண்ணன் நிரூபித்து காட்டினார். எல்லையற்ற தெய்வீக அன்பை நட்பிலும் உணரலாம் என்பது பற்றிய ஓர் உதாரணம் கீழ்கண்டவாறு உள்ளது:

பகவான் ஸ்ரீ கிருஷ்ணனைக் காணவந்த நண்பர் குசேலன் கிருஷ்ணனின் பால்யகால நண்பனான குசேலன் தன் குடும்பத்தினருடன் மிகுந்த வறுமையில் வாடியவாறு வாழ்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது குசேலனின் மனைவி, "ஒரு நாள், நீங்கள் உங்கள் பால்யகால நண்பரான ஸ்ரீ கிருஷ்ணனைச் சென்று பாருங்கள்; அவர் நம்முடைய துன்பத்தை தீர்ப்பதற்கு ஏதாவது உதவுவார்" என்று கூறினாள். இதை தன் மனைவி பலமுறை கூறியதால் ஒரு நாள் குசேலன் ஸ்ரீ கிருஷ்ணனைக் காணச்செல்வதற்கு தீர்மானித்தார். "பால்யகால ஸ்நேகிதனான கிருஷ்ணனைக் காண வெறும் கையுடன் தன் கணவரை அனுப்பிவைப்பது நன்றாக இருக்காது; கிருஷ்ணனுக்காக ஏதாவது கொடுத்தனுப்ப வேண்டும்" என்ற ஆர்வத்துடன் கிருஷ்ண்னுக்கு கொடுத்தனுப்பவதற்காகவே அவள் அக்கம் பக்கமிருந்த வீடுகளிலிருந்து பிச்சையாகப் பெறப்பட்ட நெல்லினை அவலாக்கி ஒரு துணியில் பொட்டலம் கட்டி தன் கணவர் வசம் கொடுத்து, கிருஷ்ணனிடம் கொடுக்கச் சொன்னாள். அவர் அதை எடுத்துக்கொண்டு புறப்படலானார்.

ஈரேழு லோகத்தையும் ஆளுகின்ற பிரபஞ்ச நாயகனின் அவதாரமான பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகா அரண்மனையில் வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் தன் அரண்மனையின் ஏழாவது மாளிகையில் தன் சகதர்மிணி (மனைவி) ருக்மணியுடன் இருக்கும்பொழுது, தன்னுடைய ஆத்ம நண்பனாகிய குசேலன் தூரத்தில் வருவதைக் கண்டான். குசேலன் எப்படியிருந்தார் என்றால், பார்த்தால் மிகவும் பரிதாபத்திற்குரியவராகவும் மிகுந்த தரித்திர துக்கத்தில் அடிபட்டவராகவும், மிகவும் பழையதும் ஜீரணித்ததுமான உடை (பிராமணர்களுக்குரிய பஞ்சகச்சை) உடுத்தி, அதுபோன்று மிகவும் நய்ந்துபோன ஓர் அங்கவஸ்திரத்தை தோளில் அணிந்துகொண்டும், ஒரு துணியால் பொதியப்பட்ட ஒரு அவல் பொட்டலம், மற்றும் ஒரு முக்கியமான புத்தகம் இவை இரண்டினையும் தன்னுடைய அக்கிளில் வைத்துக்கொண்டும், வெயிலை தடுப்பதற்காக கிழிந்ததும் நிறைய ஓட்டை விழுந்ததுமான ஓர் ஓலைக்குடை பிடித்துக்கொண்டும், அதிகாலையில் குளித்து, இறைவனுக்காக பூஜாதி கர்மங்களை முடித்தவாறு அவர் நெற்றியும் முகமும் இறைவனுடனுள்ள அன்பில் தோய்ந்தவாறு காணப்பட்டும், இறைவனைப்பற்றிய கீர்த்தனங்களை பாடிக்கொண்டும், நாமங்களை உச்சரித்தவாறு ருத்திராக்ஷ மாலை ஒன்றினை கையில் வைத்து இயக்கிக் கொண்டும், அவர் மனம் முழுவதுமாக இறைவனில் லயித்த வண்ணம் தொலைவில் மெல்ல நடந்து வந்துக்கொண்டிருக்கும் குசேல பிராமணனைக் கண்ட மாத்திரத்தில், அதுவரை எதற்காகவும் அழாத செந்தாமரைக்கண்ணன் தன் நண்பனை கண்டதனாலுள்ள மகிழ்ச்சியினாலோ அல்லது அதுவரை பிரிந்திருந்ததால் ஏற்பட்ட கட்டுப்படுத்த முடியாமலுள்ள துக்கத்தினாலோ, ஏனோ தெரியவில்லை, அந்த அவதாரபுருஷனான பகவான் கிருஷ்ணன் அழுது கலங்கிய, கண்ணீரால் குளமான கண்களுடனும் கண்ணீரால் நனைந்த முகத்துடனும் ஏழாவது மாளிகையிலிருந்து கீழே இறங்கி, ஓடோடி வந்து தன் நண்பன் குசேலன் வரும் வழியை நோக்கிச் சென்று, செய்வதறியாமல் தவித்தவண்ணம் வெயிலில் நடந்து களைத்து வியர்வுடனிருந்த அவரை ஆலிங்கனம் (கட்டிப்பிடித்து) செய்து, பின் அவர் தன் நண்பனின் கரங்களை பிடித்தவாறு அரண்மனை மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவரை ஓர் அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தில் (இருக்கையில்) அமரச்செய்து, பின்னர் அவர் தன் கைகளால் நண்பனின் பாதங்களை கழுவி, நறுமணமுடைய மலர்களை சந்தனத்தில் தோய்த்து அவருக்கு பாத பூஜை செய்து, நண்பனின் பாதம் கழுவிய தண்ணீரை தன் சிரசில் தெளித்து மகிழ்ந்தார். பின்னர் அவர் தன் நண்பனை வேண்டியவண்ணம் உபசரித்தார்.

உபசாரமெல்லாம் முடிந்த பின்னர் அனைத்திற்கும் நாயகனான ஸ்ரீகிருஷ்ணன் குசேலனை நோக்கி "தற்போது நான் தாங்கமுடியாத பசியாக இருக்கிறேன். நியாயமாகச் சொன்னால் என்னை எல்லாரும் "சாப்பாட்டில் பெருத்த ஆசையுடையவன்" என்றுதான் கூறுவர்; எனவே அந்த பொட்டலத்தை என்னிடம் கொடுங்கள்; நான் அதை உண்டு, என்னுடைய பசி தீர்ந்தால் களங்கமற்ற தங்களின் சம்சார துக்கம் முழுவதும் இத்துடன் தீர்ந்துவிடும்" என்று கூறிக்கொண்டு குசேலனின் மனைவி பிச்சையெடுத்து கொடுத்தனுப்பியிருந்த,





www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com



அக்கிளிலிருந்த அவல் பொட்டலத்தை குசேலனடமிருந்து தாமாகவே கைப்பற்றி, அதை அவிழ்த்து கல்லும் நெல்லும் கலந்த அவலினை ஒரு பிடி வாரி வேகமாக சாப்பிட்டார். அடுத்து இரண்டாவதாக அவலினை வாரி உண்ண முயன்றபொழுது ருக்மணி கிருஷ்ணனின் கையைபிடித்து தடுத்து நிறுத்தினாள். ஒரு பிடி அவல் உண்ட உடனேயே கிருஷ்ணன் கூறியது போலவே குசேலனின் சம்சார துக்கம் முழுவதும் தீர்ந்துவிட்டது. கிருஷ்ணன் இவ்வாறாக குசேல நண்பனை ஆசிர்வதித்தார்.

இந்த விஷயம் குசேலனுக்குத் தெரியாது. அவர் துவாரகாவிலிருந்து வீடு திரும்பும் வழியில் "நான் கிருஷ்ணனிடம் ஏதும் கேட்கவேயில்லையே, வீட்டுக்குச் சென்றால் மனைவிக்கு நான் என்ன பதில் கூறுவேன்" என்று மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்பினார். வீடு இருக்கும் இடத்தில் வந்து பார்த்தபொழுது அவருடைய வீடு அங்கு இல்லை. தாம் வழி தவறி வந்ததாக எண்ணி, குழப்பமடைந்து ஒருகனம் யோசிக்கலானார். அவர் செய்வதறியாமல் தவித்த நிலையில் இருந்த பொழுது, பட்டாடைகள் உடுத்தி, நிறைய ஆபரணங்கள் அணிந்த வண்ணம், அரண்மனை போன்ற ஒரு பெரிய மாளிகையிலிருந்து அவருடைய மனைவி மற்றும் குழந்தைகள் இறங்கி வருவதை அவர் கண்டார். அவர்கள் அவரை வரவேற்றனர்.

"தாம் கேட்காமலேயே நண்பர் கண்ணன் சகல ஐஸ்வர்யங்களையும் தந்திருக்கிறார்" என்று எண்ணி பூரிப்படைந்து, மனம் மகிழ்ச்சியுற்று கண்ணனின் உண்மையான அன்பை (தெய்வீக அன்பை) அப்பொழுது அவர் உணர்ந்தார்.

இந்நிகழ்வு தெய்வீக அன்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. உண்மையான அன்புதான் தெய்வீக அன்பு, அது எல்லையற்ற இறை அன்பேயாகும். அதேபோன்று ஒவ்வொருவரும் பிறரிடத்தில் அன்பு கொள்ள வேண்டும், இந்த அன்பு வளரவேண்டும், அதை நாமே வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த அன்பு நம்மை இறைவனிடத்தில் இணைத்துவிடும்.

"அன்பை கேட்டுப்பெற முடியாது. அது மற்றொரு இதயத்திலிருந்து பரிசாக மட்டுமே வருகிறது. ஒரு முறை உங்கள் அன்பை அளித்துவிட்டால் அது என்றும் நீடித்திருக்கவேண்டும். அது அந்த மனிதனில் அருகாமையில் இருப்பதற்கல்ல. அந்த ஆன்மா பூரணத்துவம் பெற நீங்கள் விரும்புவதற்காக மட்டுமே". என்று பரமஹம்ஸர் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தார்: "என் குருதேவர் ஸ்ரீயுக்தேஸ்வர் கிரியிடமிருந்து, நான் "ஒரு பெண்ணை, மனிதனை மோகவலையில் சிக்கவைத்து அவனுடைய ஒழுக்க நாசத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு கருவி என்று எண்ணாமல் அவளை பிரபஞ்சத்தின் தெய்வீக அன்னையின் பிரதிநிதியாக காணக் கற்றுக்கொண்டேன். மனிதன், பெண்ணை தாயின் சின்னமாகக் காணத்துவங்கும்பொழுது அவன் என்றுமே பார்த்திராத ஓர் அன்பான பாதுகாப்பை அவளிடம் உணர்கிறான். இறைவனின் அருளால் என்னால் பல ஆண், பெண்களின் மனங்களை இந்த ஆன்மீகக் கருத்தின் வாயிலாக மாற்ற முடிந்திருக்கிறது. ஒவ்வொரு ஆணும், பெண்ணை தெய்வீக அன்னையின் வடிவமாகவும் ஒவ்வொரு பெண்ணும் ஓர் ஆணை பரமபிதாவின் வடிவமாகவும் பார்க்க வேண்டும். அம்மனிதர்கள் என்னைப் பார்த்துவிட்டு சென்றபொழுது, தெய்வத்தாயும் பிரபஞ்சத் தந்தையும் என் மூலமாக பேசியதாக அவர்கள் உணர்ந்தார்கள். ஏனெனில் நான் அவர்களிடம் அந்த தெய்வீக உணர்வு நிலையிலிருந்துதான் பேசினேன்".

மேலும் அவர் கூறுகிறார்: "மணமான சில வருடங்களுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான கணவன் மனைவியர்களும் "எங்கள் அன்பு எங்கே போயிற்று?" என்று தங்களையே கேட்டுக்கொள்கின்றனர். அது பாலுணர்வின் தவறான உபயோகம்தான் அதற்குக் காரணம். சுயநலம், மரியாதைக்குறைவு இவைகளிலான பலிபீடத்தில் எரிக்கப்பட்டுவிடுவதால் அன்பு சாம்பலாகி விடுகிறது. ஒரு பெண்ணின் மூன்று அங்குல நாக்கு ஆறடி உயரமுள்ள மனிதனை கொல்லவல்லது என்று கூறப்படுகிறது. ஆணும் பெண்ணும் ஒருவரை மற்றொருவர் மோசமாக நடத்தும்பொழுது அவர்கள் இருவரும் சேர்ந்து தங்கள் மகிழ்ச்சியை நிரந்தரமாக அழித்துக் கொள்கின்றனர். ஒரு பெண் தன்னுடைய ஆன்மீக இயல்பை அறிந்துகொள்ள உதவ வேண் டும். அவள் தன்னுடைய புலன் இன்பத்தை திருப்திப் படுத்துவதற்காக மட்டும் அல்லாமல், அவள், தான் மதிக்கவும் மற்றும் இறை வடிவமாகக் கருதச் செய்யும் ஒரு தோழியாகத் தன்னுடன் உள்ளான் என்று அவள் உணரும்படி அவன் செய்ய வேண்டும். மனிதன் ஒரு பெண்ணிடத்தில் இறைவனைக் காண முயல வேண்டும். ஒரு மனைவியும் தன் கணவனை இம்மாதிரியாகத்தான் காண வேண்டும்."

பரமஹம்ஸர் தியானம் செய்யும்பொழுது இறைவனை நோக்கி கீழ்கண்ட அன்பு கீதத்தைப் பாடியதாகக் கூறுகிறார்:

"ஏ தெய்வத்தாயே, நான் உந்தன் சிறு குழந்தை. சிரஞ்சீவத் தன்மை கொண்ட உந்தன் மடியில் இரகசியமாக அமர்ந்திருக்கும் ஆதரவற்ற குழந்தை. உந்தன் மடியில் மறைந்திருக்கும் சுவர்க்கத்திற்கு உந்தன் மடி என்னும் புகலிடம் மூலம் நான் சுவர்க்கத்திற்கு யாரும் அறியாமல் இரகசியமாகப் புகுந்துவிடுவேன். எந்த கர்ம வினையும் என்னைத் தீண்டாது; ஏனெனில் நான் குழந்தையன்றோ, உந்தன் சிறு குழந்தை, உந்தன் ஆதரவற்ற குழந்தை."

மேலும் அவர் கூறுகிறார்: "இறைவனுடன் அம்மாதிரியான உறவைத்தான் கொள்ள வேண்டும். ஏனெனில் தெய்வத்தாயின் அன்பு தான் எல்லாவற்றையும் மன்னிக்கும் இறை பேரன்பு".

மனித வாழ்வில் ஒவ்வொரு நொடியிலும் நமக்கு நிகழும் ஒவ்வொரு நிகழ்வும் இறைவனின் அருளாசியால் மட்டும்தான் நிகழ்கிறது. இறைவனை எப்பொழுதும் நினைவில் வைத்து, அவனுடன் வாழும் ஒருவருக்கு எந்த துன்பமும் நேராது. நேர்ந்தாலும், மலைபோல் வருவதை பனிபோல் ஆக்கிவிடுவார் இறைவன். இந்த வாழ்க்கையை புரிய வைக்கிறது நம்முடைய துன்பங்கள். அவை நமக்கு பாடம் கற்பிக்கிறது. "இந்த வாழ்க்கையும் உலகமும் உலகப்பொருளும் எல்லாம் அழிவுற்றது", அழிவற்ற இறைவனைத் தேடிக்கண்டுபிடித்து, அவனுடனுள்ள வாழ்க்கையை வைராக்கியத்துடன் அடைவதற்கென்றே இந்த துன்பங்கள் வருகின்றன. அது இறைவனுடைய கருணையே ஆகும்.

இறைவனை அதிகமாக நேசிக்கும் ஒரு மனிதன் எப்பொழுதும் இறை பேரின்பத்தில் மிதந்து கொண்டிருப்பான். இறைவன், எப்பொழுதும் ஒருவனுடன் இருக்க வேண்டும் என்றால் அது ஆழ்ந்த தியானத்தால் மட்டுமே கை கூடுவதாகும். பக்தியாலும் வரும். ஆனால் பக்தியை விட தியானம் மேன்மையானது. இறைவனுடனுள்ள அளவற்ற பக்தி தியானநிலைக்கு கொண்டு செல்கிறது.

கணவன் மனைவியர்க்கிடையே உள்ள அன்பு, சகோதர்களுக்கிடையே உள்ள அன்பு, நண்பர்களுக்கிடையே, தாயிடத்திலும் தந்தையிடத்திலும் குழந்தைக்குள்ள அன்பு மற்ற எல்லா உறவுகள் மூலம் ஏற்படுகின்ற அன்பு எதிர்பார்ப்புடன் கூடியதாகும். அவ்வாறிருக்கையில், அவைகள் அனைத்தையும் விட ஜீவாத்மாபரமாத்மாவிற்கிடையே உள்ள பூரணத்துவம் நிறைந்த, நிபந்தனையற்ற அன்புதான் மிகவும் உன்னதமான அன்பு. இதற்கு மேலான அன்பு வேறேதும் இல்லை. உறவுகளுக்கிடையே உள்ள உண்மையான சிறு களங்கம்கூட இல்லாத அன்புதான் தெய்வீக அன்பு என்பதை குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் பல நிகழ்வுகள் மூலம் நிரூபித்துள்ளார்.

அந்த அன்பைத்தான் ஒரு மனிதன் பெற வேண்டும். அதற்கு இறைவனின் விதிமுறைகளை மீறாமல் நடக்க வேண்டும். தாய் தந்தை விரும்பியவாறு ஒரு குழந்தை நடந்துகொண்டால் அந்தத் தாய்தந்தையர் எவ்வளவு மகிழ்வர். அதுபோன்றுதான் இறைவினிடத்தில், அவன் விரும்பியவாறு குழந்தைகளான மனிதர்கள் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு இறைவனின் விதிமுறைகளைக் கடைபிடித்து வாழும் குழந்தைகளான மனிதர்களை நிச்சயம் அவன் கைவிடமாட்டான்.

சரீரம், மனம், ஆத்மா இவை மனிதனுக்கு எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இது மிக முக்கியம். இவை ஆரோக்கியமாக இருந்தால் மட்டும்தான் நல்வாழ்வு வாழ முடியும். மாறாக இவைகளுக்கு கெடுதல் விளைவிக்கின்ற வகையிலான, மது அருந்துதல், புகை பிடித்தல் மற்றும் தேவையற்ற பெண்கள் சகவாசம் போன்ற தீயப் பழக்கங்களை அறவே விட்டொழித்து ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். ஒழுக்கம் நல்வாழ்விற்கும் இறைவழிக்கும் வழிகாட்டுகிறது.'ஒழுக்கம்' என்பது பரமஹம்ஸரின் முக்கியமான போதனைகளில் ஒன்று. இறை குணங்களாகிய கருணை, தயை, பரிவு, மன்னிக்கும் குணம், பணிவு, பயமின்மை போன்றவை தெய்வீக அன்பை வளர்ப்பதற்கு உதவுகிறது. தெய்வீக அன்பினால் வாழ்வும் தெய்வீகமாகும் என்பதை பல மகான்களுடைய வாழ்க்கையின்மூலம் கற்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான உன்னத மகான்களில் ஒருவர்தான் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர்.

மீண்டும் மலரும்

குருப்பிரியா, செல் நெ.9894595909

# தந்தையின் சாபத்தால் ராமனை சந்தித்த குகன்

கங்கை நதிக்கரையில் ஓர் அந்தண முனிவர் குடில் அமைத்து தவம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஒரு புதல்வன் இருந்தான்.

ஏழு ஆண்டுகளே நிரம்ப பெற்றவன் என்றாலும், வேதங்களில் சிறந்த தேர்ச்சி பெற்றவன். அன்பும், அடக்கமும், பண்பும் பணிவும் கொண்டவனாக திகழ்ந்தான். ஒரு நாள் முனிவரை நோக்கி அவரது மைந்தன், ‘தந்தையே! தெய்வங்களுள் சிறப்புடையது எது?’ என்றான்.

அதற்கு முனிவர், ‘மகனே! தெய்வங்களின் தனிப் பெரும் தலைவர் முருகப் பெருமான். அதனால் தான் அவர் தெய்வசிகாமணி என்று அழைக்கப்படுகிறார். தேவாதி தேவர்களும் போற்றும் முழுமுதற் கடவுள். மறைகள் போற்றும் மகாதேவன். முருகப்பெருமானை வழிபட்டால், அனைத்து தெய்வங்களையும் வணங்கியதற்கு சமமாகும். முருகனை வழிபாடு செய்வோர் பிறவிப் பெருங்கடலைக் கடப்பார்கள். முக்தி நலம் பெறுவார்கள்’ என்று கூறினார்.

சிறிது காலம் கழித்து முனிவர், புனித யாத்திரை புறப்பட்டுச் சென்றார். குடிலில் சிறுவன் மட்டுமே இருந்து இறைவனை நோக்கி தவம் செய்து வந்தான்.

இந்நிலையில் கங்கை நதிக்கரையோரம் இருந்த காட்டில் வேட்டையாட மன்னன் ஒருவன் வந்தான். அவன் ஒரு விலங்கின் மீது வைத்த குறி, தவறிப்போய் அங்கு தவம் செய்து கொண்டிருந்த முனிவரின் மீது பட்டு, அவர் மாய்ந்து போனார். இதனால் அந்த மன்னனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது.



அதன் பிடியில் இருந்து விடுபட கங்கை நதிக்கரையில் உள்ள ஆசிரமம் நோக்கி வந்தான் மன்னன். ஆனால் ஆசிரமத்தில் முனிவர் இல்லை. அவர் யாத்திரை சென்றுள்ளார் என்பதை அறிந்ததும் அவன் மன வருத்தத்துடன் அங்கிருந்து புறப்பட தயாரானான்.

ஆனால் முனிவரின் மகன், மன்னனை தடுத்து நிறுத்தினான். ‘வேந்தனே! நீ என்ன காரணமாக வந்தாய்? உமக்கு என்ன கவலை?. என்னை சிறுவன் என்று எண்ண வேண்டாம். இருள் சூழ்ந்த வீட்டிற்குள், சிறுவன் விளக்கை எடுத்துச் சென்றாலும் இருள் விலகும்தானே!. ஆகையால் என்னை அலட்சியப்படுத்தாமல், உன் குறையைக் கூறு.

உன் கவலை விலக என்னால் வழிகாட்ட முடியும்’ என்றான் அந்த சிறுவன். மன்னன் மனம் மகிழ்ந்து, தான் வந்ததன் நோக்கம் குறித்து அந்த சிறுவனிடம் எடுத்துரைத்தான். முனிவர் மகனோ, ‘மன்னா! கவலைப்பாடாதீர். இந்த புனித கங்கையில் மூழ்கி, வடதிசை நோக்கி நின்று, மூன்று முறை உள்ளம் உருகி ‘ஓம் முருகா’ என்று கூறு.

பிரம்மஹத்தி அகன்று விடும்’ என்று விமோசனம் கூறினான். மன்னனும் அவ்வாறே செய் தான். அவன் பிரம்மஹத்தி தோஷம் விலகியது. அவன் மகிழ்வுடன் நாடு திரும்பினான்.

அதற்கடுத்த சில தினங்களில் யாத்திரை சென்ற முனிவர், ஆசிரமம் திரும்பினார்.

மகனை மகிழ்வுடன் தழுவி ஆசி கூறியவரின் கண்ணில் தேர் வந்ததற்கான அறிகுறி தென் பட்டது. ‘மகனே! இங்கு தேர் சக்கரத்தின் சுவடு காணப்படுகிறதே. யார் வந்தார்கள்?’ என்று கேட்டார். மகனும், மன்னன் வந்ததையும், அவனுக்கு தான் பரிகாரமாக ‘ஓம் முருகா’ என்ற மந்திரத்தை மும்முறை கூறும்படியும் அருளியதை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தான்.

முனிவருக்கு கோபம் எல்லைகடந்தது. ‘முட்டாளே! நீ என் மகனா?. உனக்கு முருகனின் பெருமை தெரியவில்லையே. என்ன காரியம் செய்து விட்டாய்?. ஒரு முறை முருகா என்று கூறினாலே, ஆயிரம் பிரம்மஹத்தி தோஷம் விலகுமே. அதைவிடுத்து மும்முறை கூறச் சொல்லி முருகனின் பெருமையை சிறுமைபடுத்தி விட்டாயே. முருகன் பெருமையை அறியாத நீ, வேடனாக பிறப்பாயாக’ என்று சாபம் கொடுத்தார். சிறுவன், தந்தையை வணங்கி பிழையை பொறுக்குமாறு வேண்டினான்.

முனிவர் சினம் தணிந்து, ‘மகனே! நீ கங்கைக் கரையிலேயே பிறப்பாய். வேடனாக பிறந்தாலும், முருகன் நாமமே உனக்கு பெயராக விளங்கும். நற்குண சீலனாக திகழ்வாய். அந்த பிறவியில் உனக்கு ராமபிரான் நண்பனாகும் நலம்பெறுவாய்’ என்று அருள் புரிந்தார்.

சாபத்தின் காரணமாக மறுபிறப்பில் கங்கைக் கரையில் வேடனாக பிறந்த அவன், குகன் என்று அழைக்கப்பட்டான். அயோத்தியில் இருந்து காட்டிற்கு வனவாசம் வந்தபோது, ராமபிரான் குகனை சந்தித்தார். முனிவர் தன் மகனுக்கு கொடுத்தது சாபம்தான் என்றாலும், அந்த சாபமே, ராமபிரானை சந்திக்கும் வரத்தை அவனுக்கு அளித்தது.





# சங்கிலி பூதத்தார்

## அற்புதமான வரலாறும் பல்வேறு பெயர்களும்

ஆதிகாலத்தில் தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து அமிர்தத்திற்காக திருப்பாற்கடலை கடையும்போது ஆலகால விஷத்தோடு பாரிஜாத மரம், காமதேனுப் பசு மற் றும் மேலும் பல அதிசயங்களும், அற்புதங் களும் வெளியே வந்தன. அப்படி அமிர் தத்தோடு பலதரப்பட்ட விஷயங்கள் வெளி வரும் நேரத்தில் சங்கொலி முழங்க விசித்திரமான, வீரியமான பலவிதமான பூதகணங்களும், அந்த பூதகணங்களுக்கு எல்லாம் ராஜாவான சுவாமி சங்கிலி பூதத்தார் கையில் தண்டத்தை ஆயுதமாகவும், உடல் மேல் கனத்த இரும்புச்சங்கிலிகளை ஆபரணமாகவும் அணிந்தவாறு பார்த் தாலே பதற வைக்கும் பிரமாண்ட ஆங்கார, ஓங்கார உருவத்தோடும், ஆரவார சப்தத்தோடும் ஆக்ரோஷமாக, பாற்கடலில் இருந்து வெளியே வருவதைக் கண்ட தேவர்களும், அசுரர்களும் மற்ற முனிவர்கள்,சித்தர்கள் அனைவரும் அஞ்சி நடுநடுங்கி ஓடிப்போய் ஒளிந்து கொண்டனர். அமிர்தத்தோடு பிறந்ததால் சங்கிலி பூதத்தாருக்கு ‘அமிர்த பாலன்’ என்றொரு பெயரும் உண்டு. கையில் குண்டாந்தடியான தண்டத்தை ஆயுதமாக ஏந்தியுள்ளதால் ‘தண்டநாதன்’ என்றும் கூறுவர். திருப்பாற்கடலில் பிரமாண்ட உருவத்தோடும், அனைவர் கண்ணையும் பறிக்கும் முத்து போன்ற பிரகாசத்தோடும் தோன்றியதால் ‘ராக்சஷ முத்து’ என்றும் அன்பர்களால் அழைக்கப்படுகிறார்.

பயந்து நடுங்கிய தேவர்கள் மற்றும் அசுரர்களுக்கு பயத்தை தெளிவிக்க எண்ணிய சிவபெருமான், சங்கிலி பூதகணங்களையும், பூதகணங்களுக்கெல்லாம் ராஜாவான சங் கிலி பூதத்தாரையும் அமைதிப்படுத்தி, ஆசுவாசப்படுத்தி தன்னோட பிள்ளை களாக ஏற்றுக்கொண்டு அவர்களை கைலாயத்தில் வைத்துக் கொண் டார்.

தந்தையான சிவபெருமானின் நெல்லையப்பர் கோயில் மற்றும் பல சிவன் கோயில்களிலும், தாயான அம்பாள் கோயில்களிலும், சகோதரனான முருகன் வீற்றிருக்கும் திருச் செந்தூர், வள்ளியூர், ஐயப்ப சாஸ்தாவின் சொரி முத்தையனார் கோயில், மற்றும் மாமாவான பெருமாளின் நம்பி கோயில் போன்ற பல கோயில்களிலும் காவல் தெய்வமாக இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து பாதுகாத்து வருகிறார். சங்கிலி பூதத்தார்.

சிவபெருமான் ஆணையின் பேரில் பூத ராஜாவான நமது சங்கிலி பூதத்தார் மற்ற பூத கணங்கள் உதவியோடு மிகவும் சிறப்பாக கைலாய நிர்வாகம் செய்து கொண்டு இருந்தார். ஒருமுறை சிவபெருமான் சங்கிலி பூதத்தாரிடம் மொத்த கைலாய நிர்வாகப் பொறுப்பையும் கொடுத்து விட்டு ‘பூலோகப் பயணம் போய் வருகிறேன்’ என்று கூறிச் சென்றார்.அப்படி போன சிவன் திரும்பி வரவேயில்லை. நெடுங் காலமாக பொறுத்திருந்து பார்த்த பார்வதி தேவி பூதத்தாரை அழைத்து,‘அமிர்த பாலனே, பூமிக்கு போன உங்கள் தந்தையை வெகுநாட்களாக காணவில்லையே.விபரம் ஏதும் அறிவாயாஞ்’ என்று விசாரிக்க, ‘இன்னும் சிறிது நாளில் வந்து விடுவார் அன்னையே’ என்று பூதத்தார் பதில் கூறினார். இப்படியாக பல நாள்கள் கழிந்தன.

கேட்கும் போதெல்லாம் பூதத்தார் இதே பதிலை சொல்ல பார்வதி அன்னை ஒருநாள் கோபப்பட்டு, ‘என்ன செய்வாய், ஏது செய்வாய், என்று நான் அறியேன். நீயே நேராக பூலோகம் சென்று உங்கள் தந்தையை கையோடு அழைத்து வா’ என்று உத்திரவிட, மீறமுடியாத பூதத்தாரும் தந்தையைத் தேடி பூலோகம் கிளம்பினார். அப்படி அவர் தேடி வரும்போது தூரத்தில் சிவனும் கைலாயத்துக்கு திரும்பி வருவதை பூதத்தார் பார்த்து விட்டார். ஆனால் பூதத்தார் வருவதை சிவபெருமான் கவனிக்கவில்லை.

‘ஆஹா.., நாம் கைலாயம் விட்டு கீழிறங்கி வருவதை அப்பா பார்த்தால் கொடுத்த கைலாயப் பொறுப்பை கவனிக்காமல், ஊர் சுற்றுவதாக தவறாக நினைத்து, கோபப்பட்டு, சத்தம் போடுவாரே.., ஏன் இப்படி வந்தாய் என்று கேட்டால் பார்வதி அன்னை ஆணை இட்ட விபரம் சொல்ல வேண்டி வருமேஞ், நாம் சாபம் வாங்கினாலும் பரவாயில்லை, நம் மால் அன்னை பார்வதி தேவிக்கு எந்தவித அவப்பெயரும் ஏற்படக் கூடாது, குடும்பத்தில் குழப்பம் வந்து விடக்கூடாது’ என்றெல்லாம் பலவாறு எண்ணிய பூதத்தார், பாதை ஓரத்தில் கிடந்த பாம்புச்சட்டையில் புகுந்து சிவபெருமான் கண்ணில் படாமல் மறைந்து கொண்டார்.

இதனால்தான் சங்கிலி பூதத்தாருக்கு ‘சட்டநாதன்’ (சட்டைநாதன்) என்றொரு பெயரும் உண்டு. மேலும் சங்கிலி பூதத்தார் சுவாமி இருக்கிற இடத்தில் எல்லாம் பாம்பு இருக்கும். சுவாமி பாம்பாகத்தான் பக்தர்கள் கண்ணில் படுவார். ஆனால் யாரையும், எந்த தொந்திரவும் செய்ய மாட்டார். தன்னை வேண்டி வழிபடுகிற பக்தர்களது கனவிலும் பாம்பாகத் தான் வருவார். ஆபத்து நேரங்களில் ‘ சட்டநாதா, சங்கிலிபூதம்’ என்று அபயக்குரல் கொடுத்தால் சரசரவென்று வந்து உதவிடுவார்.

சங்கிலி பூதத்தார் தன் கண்ணில் படக்கூடாது என்பதற்காக பாம்புச்சட்டையில் புகுந்ததை ஞானதிருஷ்டியில் கண்ட சிவபெருமான் சங்கிலி பூதத்தாரை அழைத்து, ‘மகனே, சட்டநாதா, சங்கிலிபூதம், அமிர்த பாலா, கைலாயத்தில் சிறப்பாக காவல் நிர்வாகம் செய்து வரும் உனது பாதுகாப்பும், திருவருளும் பூலோக மக்களுக்கும் வேண்டும் என்பதற்காகவே யாம் இந்த திருவிளையாடல் புரிந்தோம். நீதி, நேர்மை, நியாயம், நிர்வாகங்களில் சிறந்த காக்கும் கடவுளான அன்பு மைந்தன் உனக்கு இப்போது எமது அன்பு பரிசுகளாக ஆக்கும் வரம், காக்கும் வரம், அழிக்கும் வரமும் தந்தோம்.

உன்னை வணங்குவோர் எந்தக் குறையுமின்றி அன்பிலும், அறத்திலும், செல்வத்திலும் சிறந்து விளங்குவார்கள். நீ பூலோகம் சென்று சிறப்பான திருவிளையாடல்கள் புரிந்து, மக்களுக்கு நன்மைகள் பல செய்து யாம் இருக்கும் தென்கைலாயமாம் பொதிகை மலை வந்து எம்மை அடைவாய்.' என்று ஆசி வழங்கி அனுப்பி வைத்தார்.

இப்படியாக பூலோகம் வந்து சேர்ந்த பூதத்தார் ஒரு இடமென்று தங்காமல் பல புண்ணிய ஷேத்திரங்களுக்கும் பயணம் சென்றார். எனவேதான் அவருக்கு 'ஷேத்திரபாலன்' என்றொரு பெயரும் உண்டு.அப்படி சென்ற இடங்களில் எல்லாம் பல திருவிளையாடல்கள் செய்து மக்களினால் கோயில்கள் கட்டி கும்பிடப்படுகிறார். பக்தர்கள் மேல் பேரன்பு கொண்ட பூதத்தார் பெருங்கோபமும் கொண்டவர். பக்தர்கள் செய்யும் தவறுகளை பொறுமையோடு ஏற்று முதலில் குறிப்பால் உணர்த்துவார். குறிப்புகளை உணராமல் மேலும் மேலும் தவறுகள் செய்யும் பட்சத்தில் கடுமையான தண்டனைகள் வழங்கிவிடுவார்..

பல இடங்கள் சுற்றி பர்வத மலைக்கு வந்த பூதத்தாருக்கு ஆள்நடமாட்டமில்லாத அந்த இடத்தின் அழகும், அமைதியும் பிடித்து போய் விட அந்த மலையிலே மிகவும் பிரமாண்டமாக, ஓங்கி, உயர்ந்து, வளர்ந்த சந்தன தேக்கு மரத்தில் குடி அமைத்து தியான நிஷ்டையில் இருந்து வந்தார். பர்வதமலையடிவார ஊரில் முத்து செட்டி, சீனி செட்டி, முத்துராக்கன் செட்டி என்ற மூன்று சகோதரர்கள் வியாபாரம் செய்து வந்தார்கள்.

திரைகடலோடி திரவியம் தேட எண்ணம் கொண்ட மூவரும் கடல் கடந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்ல கப்பல் செய்ய முடிவெடுத்து மரம் தேடி பர்வத மலைக்கு வந்தனர்.

ஆள், அம்பு, ஆசாரிகள், கருவிகளோடு பல இடங்களில் சுற்றி அலைந்தும் பொருத்தமான மரம் கிடைக்காத சகோதரர்களின் கண்ணில் சங்கிலி பூதத்தார் குடியிருக்கும் வானளாவ ஓங்கி, உயர்ந்த பிரமாண்டமான சந்தன தேக்கு மரம் பட்டது. அழைத்து வந்த ஆசாரிகளும் கப்பல் செய்ய அனைத்து அம்சங்களும் கொண்ட மரம், இந்த மரம்தான் என உறுதி செய்ய மரத்தை வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

அப்போது ஏற்பட்ட ஆரவாரக்கூச்சல்களினால் நிஷ்டை கலைந்த பூதத்தார் காட்டிய குறிப்புகளை உணராத செட்டி சகோதரர்கள் மரத்தை வெட்ட ஆரம்பிக்க, கடுங்கோபம் கொண்ட பூதத்தாரின் திருவிளையாடலால் மரத்தின் மீது முதல் வெட்டு விழும் முன்பே கோடாரிக் காம்பு உடைந்து, தெறித்து கோடாரியானது மரவெட்டியின் தலையை துண்டாக்கி தலை வேறு, முண்டம் வேறாக்கியது.

ஆனால் எடுத்த காரியத்தில் பிடிவாதம் கொண்ட அந்த அகங்கார, ஆணவ சகோதரர்கள் மந்திரவாதியை அழைத்து மேற்கொண்டு இடையூறுகள் ஏற்படாமல் இருக்க மாந்திரீகம் செய்து, கருங்கிடா வெட்டி பலியிட்டு தந்திர பூஜைகள் செய்ய சுத்த வீர சைவரான சங்கிலி பூதத்தார் இரத்தத்தீட்டு பட்டதால் மரத்தை விட்டு இறங்கி வெளியேறினார். பின் மரமானது வெட்டப்பட்டு, வல்லம் கட்டப்பட்டு கடலில் இறக்கி வெள்ளோட்டமும் விடப்பட்டது.பின் முறையான ஹோமங்கள் வளர்த்து, பூஜைகள் செய்து தீட்டெல்லாம் கழிக்கப்பட்டு பொருள்களை ஏற்றி புறப்பட்ட கப்பலில் பெருங்கோபத்தோடும், ஆவேசத்தோடும் ஏறிய பூதத்தார் நடுக்கடலில் கடும்புயலாய், பெருமழையாய், கொடும் சூறாவளியாய் உருமாறி, சங்கிலியால் ஓங்கி அடித்து, கப்பலை தாக்கி, சிதைத்து, பல துண்டு, துண்டுகளாக்கி ஆணவ சகோதரர்களையும் கடலில் மூழ்கடித்து அழித்து விட்டு திருச்செந்தூரில் கரை ஏறினார்.

அடக்க முடியாத ஆவேசத்தோடும், ஆக்ரோஷத்தோடும் திருச்செந்தூர் வந்த பூதத்தாரை அமைதிப்படுத்திய சகோதரரான சுப்பிரமணிய சுவாமி திருச்செந்தூர் கோயில் மூலஸ்தானத்திலும், கோபுர வாசலிலும், பக்தர்கள் தங்கும் மடங்களிலும், கடற்கரையில் நாழிக்கிணற்றிலும், மற்றும் ஊருக்கு உள்ளேயும், வெளியேயுமாக இருபத்தி ஒன்று நிலையங்களை உருவாக்கி கோவிலுக்கும், வரும் பக்தர்களுக்கும், காவல் தெய்வமாக பூதத்தாரை இருக்கச் செய்தார். திருச்செந்தூர் சென்றால் தவறாமல் பாருங்கள். மூடி வைக்கப்பட்டிருக்கும் ராஜகோபுரக் கதவின் இடது பக்கத்தில் சங்கிலி பூதத்தாருக்கு துடியான நிலையம் பெரிய சிலை கொண்ட சிறிய கோயில் இருக்கும்.






## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**


தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# வீட்டிற்கு போகும்போது பெருமாள் கோவிலுக்கும் வெளியில் போகும்போது சிவன் கோவிலுக்கும் செல்லுங்கள்



பல்வேறு காரண காரியங்களுக்காக பல்வேறு கடவுள்களை இந்து மதத்தில் வழி படுவது வழக்கம்.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு சிறப்புகளை எடுத்துக் கூறியுள்ளனர் நமது முன்னோர்கள். அந்த வகையில் காத்தல், அழித்தல், படைத்தல் தொழில்களையும் படைத்து அவற் றிற்கு ஒவ்வொரு கடவுளையும் முன்னிலைப் படுத்தியுள்ளனர்.

சிவன் கோயில், பெரு மாள் கோயில், அம்மன் கோயில், முருகன் கோயில் என்று அனைத்து திருக்கோவில்களுக்கும்எந்த நாள் கிழமை என்று பாராமல் செல்லாம் என்ற போதிலும் ஒரு சில காரண காரியங்களுக்கு நாம் இறை சக்தியையும் நம்முடன் துணைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு சிலஎளிமையான வழிமுறைகளை நமது முன்னோர் வைத் திருந்தனர். அந்த வகை யில் சிவபெரு மானை வழிபடுவோருக்கு எந்த இன்னலும் ஏற்படாவண்ணம் பக்தர்களுக்கு ஏற்படும் இன் னல்களையும், கெடுதல் களையும் அழிக்கும் தெய் வமாக சிவபெருமான் விளங்குகிறார். இதன் கார ணமாகத்தான் வெளியில் எங்காவது செல்வதாக இருந்தாலும், முக்கியமான நபர்களை சந்திக்க வேண்டி தருணங்களிலும், நெடுந் தூரப் பயணம் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டி யிருந்தாலும், நமக்கு பிரச்சனை தரக்கூடிய நபர்களை சந்தர்ப்ப சூழ்நிலையால் சந்திக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதாக இருந்தாலும், நாம் அவசியம் சிவன் கோவிலுக்கு சென்று சிவபெருமானை தரிசித்துவிட்டு சிறிது நேரம் சிவன் கோவிலில் அமர்ந்து விட்டு மேற்கண்ட காரண காரியங்களுக்கு சென்றால், செல்லும் நோக்கம் வெற்றிகரமாக அமைவதோடு, நமக்கு எந்த இன்னல்களும் ஏற்படாது என்று முன்னோர் கூறியுள்ளனர்.

இதற்கான காரணம் என்னவென்றால் சிவன் கோயிலுக்கு சென்று தரிசனம் முடித்துவிட்டு நாம் செல்லும்போது பக்தர்களுக்கு வழியில் ஏதேனும் இடையூறு ஏற்படாமல் இருக்க பூதகணங்களை நம்மோடு துணைக்கு அனுப்புகிறார் சிவன். அதனால் நாமும் சிறிதுநேரம் உட்கார்ந்து இறைவனிடத்தில் மகிழ்ச்சியை தெரிவித்துவிட்டு கிளம்புகிறோம்.

இவ்வாறு சிவகணம் நம்முடன் வருவதால் நாம் செல்லும் இடத்தில், எந்தவித கெடு செலும் நம்மை அன்டாமல் சிவகணம் காக்கும் என்பதால்தான். மேற்கூறியவாறு முன்னோர் எளிய வழிமுறையை கூறியுள்ளனர்.

அதே சமயம் பெருமாள், விஷ்ணு கோயிலுக்கு சென்று தரிசித்தபின் நேராக வீட்டிற்கு வந்துவிட வேண்டும் என்று கூறுவார்கள். பெருமாள் கோவிலுக்கு சென்று வேறு எங்கும் செல்லக்கூடாது வீட்டிற்குத்தான் செல்லவேண்டும் என்று கூறுவார்கள். இதன் காரணம், விஷ்ணு கோயிலில் தரிசித்துவிட்டு வரும்போது, மகாலட்சுமி நம்மோடு நமது வளமான வாழ்க்கைக்கு உதவும் பொருட்டு வீட்டிற்கு வருகிறாள். அதனால் தான் பெருமாள் கோவிலில் தரிசனம் முடித்துவிட்டு உட்காராமலும், வேறெங்கும் செல்லாமலும் நேராக வீட்டிற்கு வர வேண்டும் என்று நமது முன்னோர் கூறியுள்ளனர். இது அவசியம் கடைபிடிக்க வேண்டிய நியதி என்று யாரும் வரையறுத்து கூறவில்லை. பக்தர்களின் தேவைக்கு ஏற்ப தங்களின் வசதி வாய்ப்புக்கேற்ப இந்த எளிய வழிமுறையை கடைபிடித்துக் கொள்ளலாம் என்பதற்காக நமது முன்னோர் கூறியதுதான் இந்த எளிமையான வழிமுறையாகும்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

**விளம்பர விபரம்**

அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

**உங்களைத்தான் தேடுகிறோம்...**

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# கொடிய நோயை எளிதாக போக்கும்

# தொப்புள் வைத்திய முறை

அறிவியல் படி, கருவுற்றவுடன் முதல் அணு உருவாகும் இடம் தொப்புள் தான். தொப்புள் உருவானவுடன், அது தாயின் நஞ்சுக்கொடியுடன் தொப்புள் கொடி மூலம் இணைக்கப்படுகிறது.

நமது தொப்புள் உண்மையிலே ஆச்சரியப்படும் ஒன்று தான். அறிவியல் படி, ஒரு மனிதன் இறந்தவுடன் 3 மணி நேரத்திற்கு தொப்புள் வெதுவெதுப்பாக இருக்குமாம். காரணம் ஒரு பெண் கருவுற்றதும், பெண்ணின் தொப்புள் மூலம் குழந்தையின் தொப்புள் வழியாக கருவிலுள்ள குழந்தைக்கு ஊட்டச்சத்து வழங்கப்படும். முழுமையாக ஒரு கரு குழந்தையாக உருவாவதற்கு 270 நாட்கள் அதாவது 9 மாதங்கள் ஆகின்றன.

நமது உடம்பில் உள்ள அனைத்து நரம்புகளும் தொப்புளுடன் இணைவதற்கு இதுவே காரணம். தொப்புளே நமது உடம்பின் குவியப்புள்ளி. அதுவே உயிரும் கூட.

தொப்புளுக்குப் பின்னால் 72000 க்கும் அதிகமான நரம்புகள் உள்ளன. நமது உடம்பில் உள்ள இரத்தத்தட்டுகளின் எண்ணிக்கை புவியின் இரு மடங்கு சுற்றளவிற்குச் சமம்.

தொப்புளில் எண்ணெய் போடுவதன் மூலம் கண்கள் வறட்சி, குறைந்த கண்பார்வை, கணையம் சீரற்றத் தன்மை, குதிகால் மற்றும் உதடு வெடிப்பு, முகப் பொலிவின்மை, பளபளப்பான முடியின்மை, மூட்டுவலி, நடுக்கம், உடல் சோர்வு, முழங்கால் வலி, வறண்ட சருமம் ஆகியவைகளில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

**கண்கள் வறட்சி நீங்க, குறைந்த பார்வை சரியாக, பளபளப்பான தலைமுடி பெற, மெருகூட்டப்பட்ட சருமம்பெற,** இரவில் படுக்கைக்குச் செல்லும் முன் 3 துளி சுத்தமான நெய் அல்லது தேங்காய் எண்ணெய் தொப்புளில் விட்டு ஒன்றரை இன்ச் தொப்புளைச் சுற்றி பரவவிடவும்.

**முழங்கால்வலி குணமடைய** இரவில் படுக்கைக்குச் செல்லும் முன் 3 துளி விளக்கெண்ணெய் தொப்புளில் விட்டு ஒன்றரை இன்ச் தொப்புளைச் சுற்றி பரவவிடவும்.

**நடுக்கம், சோர்வு, மூட்டுவலி, வறண்ட சருமத்திலிருந்து நிவாரணம் பெற,** இரவில் படுக்கைக்குச் செல்லும் முன் 3 துளி கடுகு எண்ணெய் தொப்புளில் விட்டு ஒன்றரை இன்ச் தொப்புளைச் சுற்றி பரவவிடவும்.

தொப்புளில் ஏன் எண்ணெய்விட வேண்டும்?

எந்த நரம்பில் இரத்தம் வறண்டு உள்ளதோ அதனை உங்கள் தொப்புளால் கண்டுபிடிக்க இயலும். அதனால் தொப்புள் அந்த எண்ணெயைக் குறிப்பிட்ட வறண்ட நரம்பிற்கு அனுப்பி திறக்கச் செய்கிறது.

சிறு குழந்தைக்கு வயிறு வலியென்றால், பெரியவர்கள் காயப்பொடியுடன் தண்ணீர் அல்லது எண்ணெய் கலந்து தொப்புளை சுற்றி தடவுவது வழக்கம். சில நிமிடங்களில் குணமாகும். எண்ணெயும் அவ்வாறே வேலை செய்கிறது.







# பிள்ளைகள் நன்றாக படிக்க

# வசந்த பஞ்சமி வழிபாடு

வசந்த பஞ்சமி நாளில் சரஸ்வதி வழிபாடு நடைபெற்றதாக வேதங்களிலும் புராணங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த விரத்தை பற்றி விரிவாக பார்க்கலாம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சரத் நவராத்திரி எனப்படும் புரட்டாசி மாத நவராத்திரியின் ஒன்பதாவது நாளான நவமியன்று சரஸ்வதி பூஜை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வடமாநிலங்களில் மாகமாதத்தில் (ஜனவரி பிப்ரவரி) வருகின்ற சுக்ல பட்ச (வளர்பிறை) பஞ்சமி திதி பசந்த் (வசந்த) பஞ்சமி என்ற பெயரில் சரஸ்வதி தேவிக்குரிய நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த வசந்த பஞ்சமி நாளில் சரஸ்வதி வழிபாடு நடைபெற்றதாக வேதங்களிலும் புராணங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. உலகத்தில் உயிர்களைப் படைத்த பிரம்மதேவன், தன் படைப்புத் தொழிலில் சோர்வு ஏற்பட, அதை நீக்கிக் கொள்ளும் வகையில் வசந்த பஞ்சமி நாளன்றுதான் சரஸ்வதிதேவியைப் படைத்ததாகக் கூறப்படுகிறது. சரஸ்வதி தேவியின் கையில் வீணையைக் கொடுத்து அதன்மூலம் உலக மக்களுக்குப் பேசும் சக்தியை பிரம்மா அளித்ததாகப் புராணம் கூறுகிறது.

வாக்தேவி, சாரதா, பாரதி, பிராமி, வீணா வாதினி, வாணி தை யானி என்றும் போற்றப்படுகிறாள் சரஸ்வதிதேவி. நல்லொழுக்கம், அறிவு, ஞானம், இசை, அறிவு, வாக்கு வன்மை, கவித்திறன் போன்ற குணநலன்கள் மக்களுக்குக் கிட்ட இந்த நாளில் வட மாநிலத்தவர் சரஸ்வதிதேவியை வழிபடுகின்றனர்.

ஸ்ரீ கிருஷ்ணர்கூட இந்த வசந்த பஞ்சமி நாளில்தான் சாந்தீபனி குருகுலத்தில் சேர்ந்து பதினாறு கலைகளைக் கற்றதாகக் கூறப்படுகிறது. தென்மாநிலங்களில் விஜயதசமி நாளன்று குழந்தைகளுக்கு வித்யாரம்பம் துவக்குவது போன்று, மேற்கு வங்கத்தில் இந்த வசந்த பஞ்சமி நாளன்றுதான் வித்யாரம்பம் துவக்கப்படுகிறது. இந்நாளில் கல்வியைத் துவக்கவுள்ள குழந்தைகள் முன்பாக, பென்சில், பேனா, சிறிய இசைக் கருவிகள், தொழிற் கருவிகள் போன்றவற்றை வைத்து அவற்றில் ஏதாவது ஒன்றை எடுக்கச் சொல்வர்.



குழந்தை எடுக்கும் பொருளின் அடிப்படையில் அதன் எதிர்காலம் அமையும்என்று நம்பிக்கை. உதாரணமாக பேனாவை எடுத்தால் பெரிய அறிவாளியாக ஆவர் என்றும், சங்கீத உபகரணங்களை எடுத்தால் சங்கீத மேதையாவான் என்றும், தொழிற் கருவியினை எடுத்தால் தொழில் முனைவராக ஆவான் என்றும் நம்பப்படுகிறது.

இந்த வசந்த பஞ்சமி நாளன்று சரஸ்வதி தேவியின் சிலை அல்லது படம் மஞ்சள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது.

# சிவராத்திரி நாளில் நடைபெறும் சிவாலய ஓட்டம்

மகாசிவராத்திரி: குமரியில் சிவாலய ஓட்டத்தின் சுவையான பின்னணி இதுதான்!

மகா சிவராத்திரியை முன்னிட்டு குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிவாலய ஓட்டம் நடைபெற்று வருகின்றது.

ஆண்டுதோறும் மகா சிவராத்திரி நாளில் குமரியில் பக்தர்கள் பன்னிரண்டு சிவ ஆலயங்களுக்கு நடந்து சென்று வருவார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரளா பகுதியை ஒட்டியிருக்கும் மார்த்தாண்டம் பகுதியில் அமைந்துள்ளது திருமலை அருள்மிகு மகாதேவர் கோவில். சிவராத்திரி நாளில் பக்தர்கள் தங்கள் ஓட்டத்தை இந்த ஆலயத்தில் இருந்துதான் தொடங்குவார்கள்.

திருமலையில் ஆரம்பித்து திக்குறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை, பன்னிபாகம், கல்குளம், மேலான்கோடு, திருவிடைகோடு, திருவிதாங்கோடு, திருபன்னிகோடு, திருநட்டாலம் என பன்னிரண்டு ஆலயங்களுக்கு பக்தர்கள் நடந்து செல்வார்கள். இது சுமார் 90 கிலோமீட்டர் தூரம் கொண்ட பக்தி பயணம் ஆகும்.



இதில் பங்குகொள்ளும் பக்தர்கள் மூன்று நாள் கடுமையான விரதங்கள் மேற்கொண்டு சிவராத்திரி அன்று ஓட்டத்தை ஆரம்பிப்பார்கள். காலில் செருப்பு அணிய மாட்டார்கள். ஒவ்வொரு கோவில் குளத்திலும் குளித்து ஈர துணியுடன் ஆலயம் சென்று தரிசனம் செய்து பின் அடுத்த ஆலயம் நோக்கி பயணம் செய்வார்கள்.

சிவாலய ஓட்டத்தின் வரலாறு

இந்த சிவாலய ஓட்டத்திற்கு பல கதைகள் சொல்லப்பட்டாலும் அதிகமாக நம்பப்படுவது சுண்டோதரன் எனும் அரக்கனின் கதை தான். முன்பு ஒரு காலத்தில் சுண்டோதரன் என்னும் அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் மிக சிறந்த சிவ பக்தன். சிவலிங்கத்தை எங்கு பார்த்தாலும் குளித்து அந்த லிங்கத்தை மூன்று முறை சுற்றி விட்டுதான் மறுவேலை பார்ப்பான். அவன் ஒரு முறை சிவ பெருமானை நினைத்து கடுமையாக தவம் புரிந்தான். அவனது தவத்தில் மகிழ்ந்த சிவ பெருமான் அவன் முன் தோன்றி, “என்ன வரம் வேண்டும்” என்று கேட்க, அரக்கன் “தான் யாரை நோக்கி தனது சுண்டு விரலை காட்டுகிறேனோ அவன் சாம்பல் ஆகிட வேண்டும் ” என்று வரம் கேட்க, சிவபெருமானும் கொடுத்து விட்டார்.

வரத்தை பெற்றதும் அரக்கனுக்கு தனக்கு உண்மையிலே வரம் கிடைத்து விட்டதா என்று சந்தேகம் எழுந்தது. உடனே சிவபெருமானிடம், “நான் இதனை சோத்தித்து பார்க்க தேவலோகம் வரை போகவேண்டும். இப்போது அதற்கு நேரமில்லை. அதனால் தங்களிடமே இதனை சோதித்து பார்க்க போகிறேன்” என அரக்கன் சொல்ல சிவபெருமான் அதிர்ந்து அங்கிருந்து தப்பித்து ஓடுகிறார்.

ஓடும்போதுதான் சிவபெருமானுக்கு அரக்கனின் சிவபக்தி குறித்து நினைவு வர தன் கழுத்தில் இருந்து ஒரு ருத்ராட்சையை எடுத்து கீழே போட்டார். அதில் ஒரு லிங்கம் உருவானது. லிங்கத்தை கண்டதும் மூடனான அரக்கன் அருகில் உள்ள குளத்தில் குளித்து லிங்கத்தை வழிபாடு செய்து பின் துரத்தினான். சிவபெருமானும் அரக்கன் தன்னை நெருங்கும் போதெல்லாம் ஒரு ருத்திராட்சையை போட்டு வந்தார்.

ஓடும் போது சிவபெருமான் காக்கும் கடவுளான விஷ்ணுவை உதவிக்கு கோவிந்தா.... கோபாலா.... என அழைத்தபடி ஓடினாராம். அதன் அடையாளமாகத்தான் தற்போதும் பக்தர்கள் ஓடும் பொது கோவிந்தா... கோபாலா என்று கூவிய படி செல்வார்கள். சிவராத்திரி அன்று சிவ ஆலயத்தில் நட்டகும் விசேஷத்தில் கோவிந்த கோபாலா என பக்தர்கள் முழங்குவது வித்தியாசமாகவும் புதுமையாகவும் இருக்கும்.

பன்னிரெண்டாவது ஆலயமான நாட்டலாம் வரும்போது விஷ்ணு பெண் அவதாரமான மோகினியாக தோன்றி அரக்கனை மயக்கி அவனுடன் ஆடுகிறார். விஷ்ணு ஆடுவதை போன்றே அரக்கனும் ஆட, விஷ்ணு தனது சுண்டு விரலை தன்னை நோக்கி காட்ட, அரக்கனும் அவ்வாறே செய்ய அரக்கன் சாம்பல் ஆகி விடுகிறான். அதனால் தான் பன்னிரெண்டாவது ஆலயத்தில் மட்டும் விஷ்ணு சன்னதியும் இருக்கும். சிவாலய ஓட்டத்தில் ஓடும் பக்தர்கள் தங்கள் கையில் விசிறி வைத்திருப்பார்கள். எல்லா ஆலயம் செல்லும்போது லிங்கத்திற்கும் விசிறி விடுவார்கள்.

அதாவது தங்களுடன் சிவபெருமானும் ஆடுவதாக ஐதீகம். அவ்வாறு ஓடும் சிவபெருமானுக்கு இளைப்பாற விசிறி விடுவது வழக்கம்.

பக்தர்கள், நடையாக நடப்பது மட்டுமல்லாது வாகனங்களிலும் இந்த பன்னிரண்டு கோவில்களுக்கு இந்த சிவராத்திரி நாளில் சென்று வருவார்கள். குமரி மட்டுமல்லாது கேரளாவில் இருந்தும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருவார்கள். இந்த பிரசித்தி பெற்ற சிவாலய ஓட்டத்திற்காக சிவராத்திரி நாளில் குமரி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது.

# கீதை உபதேசங்கள்

01. தூங்கும் முன் மோசமான பேச்சு பேசக் கூடிய மக்களிடையே தூங்க வேண்டாம்.
02. உங்கள் இடது கையால் குடிக்க, சாப்பிடவோ வேண்டாம்.
03. உங்கள் பற்களின் இடையே மாட்டிய உணவை எடுத்து சாப்பிட வேண்டாம்.
04. உங்கள் விரலில் நெட்டி முறிக்க வேண்டாம்.
05. காலணிகளை அணியும் முன் சரிபார்க்கவும்.
06. கழிவறை உள்ளே எச்சில் துப்பக் கூடாது.
07. கரியைக் கொண்டு பற்களை சுத்தம் செய் யக்கூடாது.
08. உங்கள் கால்சட்டையை உட்கார்ந்து அணிய வும்.
09. கடினமானதை பற்களைக் கொண்டு கடிக் கக் கூடாது.
10. சூடான உணவை ஊதி சாப்பிடக் கூடாது.
11. மற்றவர்களின் தவறுகளை பார்க்க வேண்டாம்.
12. உங்கள் நண்பர்கள் பற்றி கதைகள் பேச வேண்டாம்.
13. உங்கள் நண்பர்களை விரோதம் கொள்ள வேண்டாம்.
14. உங்கள் நண்பர்கள் பற்றி சந்தேகம் வேண்டாம்.
15. சாப்பிடும் போது உணவை நுகரக்கூடாது.
16. மற்றவர்கள் புரிந்துகொள்ளும்படி தெளிவாக பேசுங்கள்.
17. தனியாக பயணம் செய்ய வேண்டாம் .
18. உங்கள் சொந்த முடிவு ஆயினும் மற்றவர்களிடம் ஆலோசனை கேளுங்கள்.
19. உங்களை பற்றி பெருமை கொள்ள கூடாது.
20. உணவை குறைக்கூற வேண்டாம்.
21. பெருமை வேண்டாம்.
22. வறுமையின் போது பொறுமை காக்கவும்.
23. நல்ல விஷயத்திற்காக உதவி செய்யுங்கள்.
24. செய்த தவறுகளை நினைத்து வருந்துங்கள்.
25. உங்களுக்கு கெட்டது செய்தவர்களுக்கு நல்லது செய்யுங்கள்.
26. இருப்பதைக் கொண்டு திருப்தி அடை யுங்கள்.
27. அதிகம் தூங்க கூடாது அது மறதியை ஏற்படுத்தும்.
28. ஒரு நாளைக்கு குறைந்தது 1 ஒரு முறை யாவது இறைவனை நினைவு கூறுங்கள்.
29. இருட்டில் சாப்பிட கூடாது.
30. வாய் முழுக்க சாப்பிட வேண்டாம்.





# யோகாவிற்கு சமமான தோப்புக்கரணம்

தோப்புக்கரணம் போட்டாலே போதும் யோகாசனத்தின் அனைத்துப் பலன்களும் கிடைத்துவிடும்.

நமது முன்னோர்கள் வழிபாட்டின் ஒரு பகுதியாக தோப்புக்கரணத்தை வைத்திருந் தார்கள். உண்மையில் அது ஒரு நல்ல உடற் பயிற்சி.

தோப்புக்கரணம் போடும்போது காது மடல்களைப் பிடித்துக் கொள்கிறோம். காது மடல்களில் உடலின் எல்லா உறுப்புகளையும் இணைக்கிற புள்ளிகள் இருக்கின்றன.

காது மடல்களைப் பிடித்துத் தோப்புக் கரணம் போடும்போது உடலின் எல்லா உறுப்புகளுக்கும் செயல்படுவதற்கான தூண்டுதல் கிடைக்கிறது. உடல் இயக்கம் சீர்படுகிறது.

தோப்புக்கரணம் போட விரும்பும் ஒருவர், ஆரம்பத்தில் அவருடைய தோள்பட்டை அளவுக்குக் கால்களை விரித்து வைத்துக் கொண்டு தோப் புக்கரணம் போட வேண்டும்.

பின்னர் பயிற்சியானவுடன் கால் களைச் சேர்த்து வைத்துக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும்.

வலது கை விரல்களால் இடது காது மடல்களையும், இடது கை விரல்களால் வலது காது மடல்களையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழ வேண்டும்.

உட்காரும்போது மூச்சை உள்ளிழுக்க வேண்டும். எழும்போது மூச்சை வெளிவிட வேண்டும். இவ்வாறு மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவதால், நமது தண்டுவடத்தில் மூலாதாரத்தில் சக்தி உருவாகும். உட்கார்ந்து எழும்போது, காலில் உள்ள சோலியஸ் எனும் தசைக்கு வேலை கொடுக்கிறோம். உடல் முழுக்க இரத்த ஓட்டத்தை சீராக்கும் இதயத்தின் தசை களைப் போலவே இயங்கக் கூடியது, இந்த சோலியஸ் தசை. இதனால் உடல் முழுவதும் ரத்த ஓட்டம் சீராகும்.

மூன்று நிமிடங்கள் தோப்புக்கரணத்தைத் தொடர்ந்து செய்தால் வேறு எந்த உடற்பயிற்சியும் செய்ய வேண்டியதில்லை.



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# உண்மையான யோகம் என்பது அன்புணர்வோடு இறைவனுடன் நம்மை இணைத்துக் கொள்வதாகும்

- பெற்றோரை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர் காலத்தில் நீங்கள் தாய் தந்தையர் ஆகும் போது, உங்களை உங்கள் பிள்ளைகள் மதிப்புடன் நடத்துவார்கள்.
- மண்ணில் பிறக்கும் உயிர்களில் மனிதப்பிறவி தனிச்சிறப்புடையது. கடவுளின் கரங்களில் இருந்து இவ்வரிய கொடையாகிய மனிதப்பிறவி என்னும் வெகுமதியை பெற்ற நாம், அதன் அருமையை உணராமல் வாழ்ந்தால், பெரும் பாவம் செய்தவர்களாகி விடுவோம்.
- மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புலனடக்கம் இல்லாததால் உலக சுகங்களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.
- சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத்தான் யோகாசனம் என்று எண் ணிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.
- அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனிதனையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை இறைவனே தேடிவந்து விடுவார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.

